
www.tamilarangam.net

# வேர்கள்

அ ற மு ம் வீ ர மு ம் வெ ல் லு ம்

சுறவம் 2030 (தை 1999) வேர் : 3 மலர் : 7 விலை : 4 உருபா




உள்ளே...
இன்னும் பல ...

**கொள்ளைக்காரனுக்கு அஞ்சல்தலையா?**
**தமிழருக்கு எதிராக அணி திரளும் தெலுங்கர்கள்!**
**மொழிப்போரில் திராவிடக் கயமை!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குணா எழுதிய
தமிழ் தேசப்
போர் இலக்கியங்கள்

திராவிடத்தால் வீழ்ந்தோம்
10 உருபா

தமிழின மீட்சி
15 உருபா

வள்ளுவத்தின் வீழ்ச்சி
120 உருபா

விழுதுகள்
30 உருபா

மண்ணுரிமை
(அச்சில்)

பாவிசைக்கோவின் நூல்கள்

பாவிசைக்கோ பாடல்கள்
25 உருபா

திராவிட மாயை
(அச்சில்)

பூ.அர. குப்புசாமி எழுதிய

காவிரியும் கலைஞரும்
5 உருபா

காவிரி அங்கும் இங்கும்
25 உருபா



வேர்கள்
தனிச்சுற்றுக்கு மட்டும்

தொடர்புக்கு
அரிமாவளவன்
10அ3 வாத்துக்காரத்தெரு
உறையூர், திருச்சி
620003


தமிழர் களத்தில்
இணையுங்கள்
தமிழ் தேச மீட்புப்
பணியாற்றுங்கள்

நம்நாடு தமிழர்நாடு
நமது மொழி தமிழ்
நாம் தமிழர்

# வணக்கம்

தமிழ் மொழி வழிக் கல்வி என்று ஆடம்பரமாக அறிவிப்பு செய்துவிட்டு இப்போது 'சில மாற்றங்கள்' என்ற பெயரில் அதை நீர்த்துப் போக வைக்கும் முயற்சியும், அதை இன்னும் அரசு ஆணையாக்காமல் தள்ளிப் போடும் நயத்திறன் நிறைந்த சூழ்ச்சியும் கருணாநிதியின் கைவந்த கலைகள். தமிழருக்கும், தமிழ் மண்ணுக்கும் இவர் அடுக்கடுக்காக செய்து வரும் இரண்டகங்கள் கணக்கிலடங்கா! தமிழினத்தின் கடைந்தெடுத்த எதிரி அவரே!

"அடுத்தது தெலுங்கர் ஆட்சிதான்!" என்று காமாட்சி நாயுடு தலைமையில் கூடிய வடுகக் கூட்டம் கொக்கரித்துள்ளன. தெலுங்குப் பார்ப்பனர், அருந்ததியர் உள்ளிட்ட 18 வகை தெலுங்குச் சாதிகளையும் இணைத்து, திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகம் துவங்கி ஆட்சியைக் கைப்பற்றப் போகிறார்களாம்!

தெலுங்கின ஓர்மை என்று வரும் போது அவர்களுக்குள் இருக்கும் தெளிவு, தமிழர் நாட்டில் வறட்டியம் பேசுவோருக்கு பழுக்கக் காய்ச்சிய கம்பியில் போட்ட நல்ல ஒரு சூடுதான்! தமிழ்த் தேசியம் என்று பேச முற்படும்போதெல்லாம், "செருப்பு தைக்கிற சக்கிலியனை தெலுங்கர் என்கிறார்கள்!" என்று முக்கி முணங்கும் மூளைகளை செருப்பால் அடித்து, "அவன் எங்க ஆளுடா!" என்று பாடம் கற்பித்திருக்கிறார் காமாட்சி நாயுடு! "பார்ப்பன எதிர்ப்பு" என்ற கிலுகிலுப்பையைக் காட்டி மண்ணுரிமையைத் திருடிக் கொண்ட வடுகக் கூட்டம் இப்போது அவர்களுக்குள் அணி சேரும்போது மட்டும் தெலுங்குப் பார்ப்பனரை எப்படி இழுத்துக் கொள்கிறது பாருங்கள்.

இது தொடர்பாக "அப்படிச் செப்படா நொப்பன் கொரவளை" என்று தலைப்பிட்ட ஒரு துண்டறிக்கை மதுரையிலிருந்து வெளி வந்துள்ளது. அதனை இந்த இதழில் உங்களுக்கு அப்படியே மறுபதிப்பு செய்கிறோம்.

செப்தம்பர் மாத 'தலித்முரசு' இதழில் இரவிக்குமார் என்கிற ஒருவரிடம் திரு. குணா அவர்களுடைய படைப்புக்கள் குறித்த ஒரு வினாவில், "வேறு மாநிலத்தில் வாழ்பவர்களுக்கு தமிழ்நாட்டைப் பற்றிய கற்பனைதான் இருக்கும்!" என்று பிதற்றியிருக்கிறார். கர்நாடக மாநிலத்தில் இன்று ஒரு கோடி பேர் தமிழர்கள்! நயன்மைக்குப் புறம்பாக 1956 இல் மாநிலங்கள் துண்டாடப்பட்டதில்தான் தமிழகம் சிதைவுற்றது. ருசியாவில் மழை பெய்தால் தஞ்சாவூரில் குடை பிடிக்கும் 'வானவில் அறிவாளிகளின்' மூளைகளுக்கு வாழ்வே கற்பனைதானே! ஆனால், கர்நாடகாவில் உள்ள சிவப்பு வறட்டிகளுக்கு தமிழக வறட்டி ஒருவர் போட்டிருக்கிறது மேலும் ஒரு சூடுதான். ஆனால் நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதுமே!,

வேர்கள் இதழ் அச்சிடுவதிலுள்ள பொருளியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள வாழ்நாள் கட்டணத்தை அறிமுகம் செய்கிறோம். உதவிடுக! கட்டபொம்மு குறித்த செய்திகளை தமிழ் மக்கள் நடுவில் பரப்பிடுக! ஏமாந்தது போதும்; இனி தேசத்து எதிரிகளின் இடுப்பை ஒடித்து தமிழ்த் தேசக் களமாடுவோம்.

ஆசிரியர் குழு

www.tamilarangam.net

# பறையடிக்க மறுத்த தமிழனுக்கு தலை உடைந்தது!



திருச்சி துவாக்குடிக்கு அருகில் பொய்கைக்குடி எனும் சிற்றூர் அமைந்துள்ளது. அங்கே ஏறத்தாழ 50 கள்ளர் குடும்பங்கள், 15 பள்ளர் குடும்பங்கள், 25 முத்தரையர் குடும்பங்கள், 20 பறையர் குடும்பங்கள் போக இன்னும் சில பிரிவினரும் அங்கே உண்டு.

பறையர்கள் கடந்த பல ஆண்டுகளாக பறையடிப்பதைத் தொழிலாகக் கொண்டு இருந்திருக்கின்றனர். பொங்கல் நாட்களின் போது வீடுவீடாகச் சென்று மாடுகளை அவிழ்த்து விடும்போது பறையடித்து பின்பு ஒவ்வொரு வீட்டின் முன்பும் மண்ணில் முகங் குப்புற விழுந்து கும்பிடுவது வழக்கமாக இருந்திருக்கிறது. அப்படி குப்புற விழுந்து கும்பிட்டவர்களுக்கு வீட்டிலுள்ளவர்கள் சின்ன சில பரிசுகளை வழங்குவராம்.

இந்த மாதிரியான ஒரு இழிவான வழக்கத்தை நிறுத்திட வேண்டும் எனக் கருதி 20 பறையர் குடும்பமும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒன்று கூடி முடிவு செய்து அம்முடிவை நடைமுறைப்படுத்தி யிருக்கின்றனர். கள்ளர்களும், மற்றவர்களும் சென்ற ஆண்டு வேறு பகுதியிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து பறையடிக்க வைத்துள்ளனர்.

இதற்கிடையில் முன்பு பறையடித்துக் கொண்டிருந்த குழந்தைசாமி, மணி, சந்தானம், கிறிஸ்டின் எனும் நால்வர் "நாங்கள் மீண்டும் பறையடிக்க வருகிறோம்!" என்று ஒப்புதல் அளித்துள்ளனர். இந்த ஒப்புதலுக்கு கைமாறாக ஒன்றரை குறுக்கம் நிலம் வேளாண் செய்யக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

"ஊர்க் கட்டுப்பாட்டை மீறுவது நல்லதல்ல" என்று மற்றவர்கள் அந்த நால்வருக்கும் எப்படியெல்லாமோ எடுத்துச் சொல்ல அது செவிடன் காதில் விழுந்த சங்கொலியானது! கடந்த ஞாயிற்றுக் கிழமை சுறவம் 3 அன்று மாலை நான்கு மணிக்கு வீடுவீடாக தப்படித்து வந்த அந் நால்வரும் இறுதியாக பழைய ஒரு முறைப்படி பறையர் பகுதியிலிருக்கும் ஒரு கிருத்துவக் கோயிலின் முன்பாக பறை அடிக்க வந்துள்ளனர். இதை அங்கிருந்த பிற பறையர் சாதி மக்கள் தடுத்துள்ளனர். "ஊர்க் கட்டுப்பாட்டை மீறிய நீங்கள், இங்கேயே வந்து பறையடிப்பது எப்படி ஞாயம்?" என்று கேட்க, அந் நால்வரும் சொல்லி வைத்தாற் போல குரலெழுப்ப அங்கே காத்திருந்த ஒரு கும்பல் திமு திமுவென வந்து கண் மண் தெரியாமல் அம்மக்களைத் தாக்கியுள்ளனர்.

அண்மைக் காலத்தில் இங்கு தோன்றியிருந்த ஒரு மகளிர் அமைப்பானது இம் மக்களிடம் ஏற்பட்டுள்ள இந்த விழிப்புணர்வுக்குக் கரணியம் என்று கருதப் படுகிறது. எனவே, தாக்குதல் நடந்தபோது அந்த மகளிர்அமைப்பு தரக்குறைவான சொற்களுக்கு இலக்காகியுள்ளது. "புழுத்த மாடு தின்னுற பறப்பயல!" என்று வாய்க்கு வந்தபடி இழிச் சொற்களால் வசை பாடியிருக்கின்றனர். இருவருக்கு மண்டை உடைந்தது.

வன்முறைக் கும்பல் அத்தோடு நிற்கவில்லை. சற்று தொலைவில் தங்களது பகுதியில் அமைதியாகத் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த முத்தரையர் களையும் அக் கும்பல் போய்த் தாக்கியிருக்கிறது. "சேர்ந்து அடிக்க வேண்டிய நீ ... படமாடா பாக்குறீக!" என்று அவர்களுக்கும் அடி விழுந்தி ருக்கிறது. அவர்களிலும் இருவருக்கு மண்டையில் ப்லத்த காயம்! நால்வரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது போக மாலா, கிளாரா எனும் 15 அகவைக் சிறுமிகளும் பலமாக தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

கள்ளர்களோடு பள்ளர்களும் சேர்ந்தே இத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை தளைப்படுத்தப்பட்ட ஏழு பேரில் இருவர் பள்ளர் சாதியினர். கலிய பெருமாள் என்கிற ஒரு அ.இ.அ.தி.மு.க காரர் மற்றும் அவரது ஆறு பையன்களும் இத்தாக்குதலில் ஈடுபட்டதாக மக்கள் புகார் கொடுத்துள்ளனர். அதில் ஒருவரான பன்னீர் செல்வம் என்பவர் படையில் வேலை செய்கிறார். கைது செய்யப்பட்ட ஏழு பேரில் அவரும் ஒருவராம். ஆனால் மற்ற ஆறு பேரும் உள்ளேயிருக்க இவர் மறுநாளே வெளியே வந்துவிட்டார். எப்படி வெளியே வந்தார் என்பது காவல்துறைக்கே வெளிச்சம்.

இதற்கிடையில் உசாவ வந்த காவல்துறையினர் சில வெள்ளைத் தாள்களில் கையெழுத்து வாங்கிச் சென்றுள்ளதாக ஒரிருவர் அச்சத்தோடு கூறுகின்றனர்.செய்தித்தாள்களெல்லாம் வழக்கம்போல நடந்த நிகழ்வுகளை "குழு மோதல்!" எனச் சித்தரித்து கதை கட்டுகின்றன.

சாதிய இறுக்கங்கள் தளராமல் தமிழ் மண்ணுக்கு விடுதலை இல்லை! பறையடிக்க மறுத்தல் என்பதை சாதீயத்திற் கெதிரான ஒரு போராட்ட உத்தியாகவே காண வேண்டும். சாதீயம் எந்த வடிவில் வளர்க்கப்பட்டாலும் அது "சாதியத் தீமையிலிருந்து விடுதலை" என்ற விடுதலைக் கருத்தியலுக்கு புறம்பானதேயாகும்! இதற்கு பொய்கைக்குடி மீண்டும் ஒரு சான்று. பள்ளர்களும், கள்ளர்களும் சேர்ந்து செயல்பட்டிருப்பதை சாதீய ஒற்றுமை என்றா கூற முடியும்? தாக்கியது பள்ளரும், கள்ளரும் ஆனாலும் தாக்குண்டது பறையரும் முத்தரையரும் ஆனாலும் சிந்தியது தமிழ் மண்ணில் தமிழ் அரத்தம் எனும் உண்மை உள்ளத்தை முள்ளாய்த் தைக்கிறது!

ரேகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திராவிடம் பேசுபவனே முதல் எதிரி!!

## மொழிப் போராட்டம் ஒரு எடுத்துக்காட்டு!!

இந்தி எதிர்ப்புப் போராட்டம்தான் முதலாம் தமிழ்த் தேசியப் போர்! அந்தப் போரில் உயிர் நீத்த எண்ணற்ற தமிழிளைஞர்கள் கட்சிகளைக் கடந்து மொழி, இனம், நாடு என்ற அடிப்படைகளை உள்ளத்தில் இருத்தி ஈகம் புரிந்த மறவர்கள். ஆனால் அந்த உயரிய ஈகத்திலும் ஊதியம் தேடியது திராவிட வந்தேறி வடுகக் கும்பல்தான்! இதில் எள்ளளவும் ஐயமில்லை! இது குறித்த உண்மை களை இன்னும் ஆழமாய் ஆய்ந்தறியும் நோக்குடன் முயன்றபோது எண்ணற்றச் சான்றுகள் எமக்குக் கிடைத்தன. இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் வெளியான அன்றைய பல நாளேடுகளை காணும் வாய்ப்பு கிட்டியது. வடுக வந்தேறிக் கும்பலின் சூழ்ச்சியும், கயமையுமே இரண்டாம் தமிழ்த் தேசியப் போருக்கான தேவையை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்று தமிழருக்குள் முகிழ்ந்து வரும் தேசிய ஓர்மையும் அது குறித்த தெளிவும் அன்று இருந்திருந் தால் அன்றே தமிழ்த் தேசிய எதிரிகளுக்கு பாடை கட்டியிருக்கலாம்.

சென்ற ஆண்டு தி.மு.க. நெல்லையில் மாநாடு போட்டது. அது குறித்த அழைப்பை தொலைக் காட்சியில் விளம்பரம் செய்த போது தி.மு.க.வின் பிறப்பு இந்தி எதிர்ப்புப் போரில் ஊறியது போன்ற தொரு காட்சியை அதில் இணைத்திருந்தது. தமிழ மக்கள் பலரும் அவ்வாறே நம்புகின்றனர். வரலாற் றைத் திரித்துத் திணிப்பதில் வடுகருக்கு இணை யாரும் இருக்க இயலாது என்றே தோன்றுகிறது.

இந்தி எதிர்ப்புப் போரில் பல நூறு தமிழர்களின் உயிர்கள் உரமாகப் இடப்பட்டிருக்கிறது. பலர் தங்களின் வாழ்வையும் வளங்களையும் அதற்காக ஈகம் செய்திருக்கின்றனர். ஆனால் ஈ.வெ.இராவும், அண்ணாவும், அவர்களின் பக்த கோடிகளும் தங்களின் குறுகிய அரசியல் இலக்குகளுக்காக அவ்வுயரிய ஈகங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதிலேயே குறியாயிருந்தனர். ஈ.வெ.இரா. நாயக்கர் இத் தேசியப் போரை கொச்சையான சொற்களால் தாக்கினார்! ஆங்கிலமே வேண்டும் என்றார்!

"முதல் பாரத்திலிருந்து இங்கிலீஷைக் கட்டாயப் பாடமாக்கியிருக்கிறார். அதுவரை மகிழ்ச்சிதான்!" (விடுதலை 7.10.48) என்றும், "எனது இந்தி எதிர்ப்பு " என்பது இந்தி கூடாது என்பதற்கோ தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல.... ஆங்கிலமே பொது மொழியாக அரசாங்க மொழியாக, தமிழ்நாட்டு மொழியாக, தமிழன் வீட்டு மொழியாக ஆக வேண்டும் என்பதற்கே யாகும்." (விடுதலை 27.1.69) என்று எழுதி தான் ஒரு ஆங்கில அடிவருடி என்பதனை தெளிவாக வெளிப்படுத்திக் கொண்டார்.

உயிரைக் கொடுத்துப் போராடிய தமிழிளைஞர்களை காலிகள் என்றே ஈ.வெ.இரா. நாயக்கர் அழைத்தார். "இந்தி எதிர்ப்பு என்ற பெயரால் நடைபெற்றது காலித்தனம்! தமிழ்நாட்டில் எங்கே உள்ளது இந்தி? .... ஆரம்பத்திலேயே நாலு காலிகளைச் சுட்டு இருந்தால் இந்த நாச வேலைகளும், இத்தனை உயிர்ச் சேதமும், உடைமைச் சேதமும் ஏற்பட்டு இருக்காது. எதற்காகச் சட்டம்? எதற்காகப் போலீசு? எதற்காக போலீசு கையில் தடி, துப்பாக்கி, எதற்கு? முத்தம் கொடுக்கவா கொடுத்துள்ளாய்? இது என்ன அரசாங்கம்? வெங்காய அரசாங்கம்! (கிளர்ச்சிக்குத் தயாராகுவோம்., பெரியார், மே 28-30, 1965)

இந்தி எதிர்ப்புப் போரில் மாணவர்கள் உயிர் ஈகம் செய்து கொண்டிருந்த அந்த வேளையில் ஈ.வெ.இரா பிறந்தநாள் விழா கொண்டாடிக் கொண்டிருந்தார். முசிறியை அடுத்த ஆமூரில் பெரியாரின் 86 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அந்த கூட்டத்தில் அவருக்கு கடலையும் பேரீச்சம் பழமும் எடைக்கு எடை பரிசாகக் கொடுக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திலும் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட மாணவர்களை காலிகள் என்றே அவர் அழைத்துக் கொச்சைப்படுத்தினார். (தினத்தந்தி 30.01.65)

அதற்கு ஓரிரு நாள்கள் கழித்து, "இந்தித் திணிப்புக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு தேவையில்லை. 1955 இல் அரசாங்கம் என்னிடம் எழுதிக் கொடுத்துள்ளது" என்று குழப்பினார்.

'இந்தி'ய நாட்டின் குடியரசு நாளான சனவரி 26 யை திராவிட முன்னேற்றக் கழகம் துயர் நாளாக அறிவித்தது. அதை ஈ.வெ.இரா. தரந் தாழ்ந்துப் பேசி இழிவு செய்தார்! "பொம்பளதான் துக்கம் கொண்டாடுவாள்!" என்றெல்லாம் பேசி கொச்சைப் படுத்தினார். கருணாநிதி ஈ.வெ.இரா. நாயக்கருக்கு குளித்தலையில் காரசாரமான விடையளித்தார். இந்தித் திணிப்பை எதிர்த்து உயிர் நீத்த ஈகி சின்னச்சாமியின் ஆண்டு நினைவு விழாவின் போது, "இதே பெரியார் 'இந்தி'ய விடுதலை நாளை துயர நாளாக அறிவிக்கவில்லையா? அப்படியானால் இதுவரைப் பெண்ணாக இருந்த பெரியார் இப்போது பழனியம்மாள் போல ஆணாக மாறிவிட்டாரா? என்று தனது "பகுத்தறிவுப் பகலவனை" நோக்கிக் கேட்டார்! (சனவரி 26, தினத்தந்தி, 1965)

அந்த நாளில் வெளிவந்த ஏடுகளிலெல்லாம் இந்தி எதிர்ப்புப் போர் பற்றிய செய்திகள் நிறைந்து இருந்த வேளையில் டிட்டோ பற்றி செய்தி 21.01.65 அன்றைய தினத்தந்தியின் 5 பத்திச் செய்தியாக அடைத்துக் கொண்டது. டிட்டோ வேறு யாருமல்ல! பெரியார் போகும் போதும் வரும் போதும் கூட்டிச் செல்லும் நாய்தான் அது! அது காணாமல் போய்விட்டதாம். தினத்தந்தியில் அறிக்கை விட்டு, பின்பு அது சிதம்பரத்திலிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, மணியம்மை மகிழ்ச்சியடைந்தார், என்று செய்திகள் வந்தன. உரோமை எரிந்த போது நீரோ பிடில் வாசித்த கதைதான்!

www.tamilarangam.net

மாணவர்களின் இயல்பான எழுச்சியைக் கண்டு தி.மு.க. அஞ்சி நடுங்கியது. இந்தி எதிர்ப்பை உரமாக்கி ஆட்சிக் கட்டிலில் குந்தி விடலாம் என்று கனாக் கண்ட கூட்டத்திற்கு உண்மையான விடுதலையை மாணவர்கள் முன்னின்று நடாத்திப் பெற்று விடுவார்களோ என்ற அச்சம் திராவிடங்களை இறுகப் பற்றிக் கொண்டது.

"கிளர்ச்சியை மாணவர்கள் தொடர்ந்து நடத்தக்கூடாது என்று தி.மு.கழகம் வேண்டுகிறது" (22-2-65 தமிழ்நாடு)

"மாணவர் கிளர்ச்சிக்கும் தி.மு.க.விற்கும் தொடர்பு கிடையாது"

"மாணவர் கிளர்ச்சியை தி.மு.க. தூண்டவில்லை என்று ஆளும் கட்சியிலுள்ள சிலர் கூறியிருப்பதற்கு நான் நன்றி செலுத்துகிறேன்!" கூறியது அண்ணா.

"கிளர்ச்சியைக் கைவிட இதுவே தக்க தருணம்" இதுவும் அண்ணாதான்!

கண்ணதாசன் அவர்கள் தான் ஆசிரியராக பணியாற்றிய தென்றல் திரை என்ற ஏட்டில் அண்ணாவின் முகத்திரையைக் கிழித்தார்! "திட்டம் வகுத்தபோது சம்மதம்! அமுலாகும் போது துக்கமா?" என்று தலைப்பிட்டிருந்த அத் தலையங்கம் கண்ணதாசன் அவர்கள் சென்னையில் ஆற்றிய ஒரு உரையின் சுருக்கமே! அண்ணாதுரையின் மோசடி அரசியலை விளக்குகிறேன் என்று உரையாற்றிய கண்ணதாசன் அவர்கள் "இந்தியோடு ஆங்கிலமும் ஆட்சி மொழியாகும் என்ற இரு மொழித் திட்டத்தை 1958 இல் தமிழக அரசு தயாரித்து அத் திட்டம் சர்வகட்சி ஒப்புதலுக்கு போனபோது அண்ணாதுரை மனப்பூர்வமாக அதை ஏற்றுக் கொண்டு அதில் கையெழுத்து போட்டுக் கொடுத்தார்! தி.மு.க. அதை வரவேற்றது. வரவேற்றுப் பேசியது! என்று கண்ணதாசன் உண்மைகளைப் போட்டுடைத்தபோது தி.மு.க.விடமிருந்து விடையேதும் வரவில்லை.

இப்படி திராவிடங்களின் இரண்டக வரலாற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இனத்தின் உண்மை வரலாற்றை அறியாமல் ஒரு போராளியால் நாட்டை மீட்க இயலாது. தமிழினத்தின் எழுச்சிக்கு அன்றும் இன்றும் தடையாய் இருந்தது திராவிடமே! இனத்தின் உண்மையான எதிரிகளை அடையாளம் காட்டாமல் இனத்தை ஒன்றுபடுத்தி விடுதலையை வென்றெடுக்க இயலாது. தமிழினத்தின் முதல் எதிரிகள் வடுகரே!

அரங்கநாதன் போன்ற எண்ணற்ற ஈகிகள் தங்கள் இன்னுயிர்களை எரி நெருப்பிலும், போர்க் களத்திலும் அளித்தது இம் மண்ணின் விடுதலைக்காகத்தான். அண்டிக் கெடுக்கும் வடுகரே தமிழினத்தின் உண்மை எதிரிகள் என்று அவர்கள் அன்று காணத் தவறினாலும் அவர்களின் ஈகம் போற்றுதலுக்குரியது. திராவிடம் எனும் வடுகக் கருத்தியல் செத்து ஒழிந்தாலொழிய இந்த மண்ணின் மக்கள் விடுதலை பெற முடியாது! திராவிடம், பெரியார், அண்ணா என மேடையில் முழுங்கும் திராவிடங்களுக்கு பாடை கட்டினாலேயே தமிழ்த் தேசியம் மலரும்.

தமிழ்த் தேசியச் சாயம் பூசிக் கொண்டு திராவிடத்தைத் தூக்கிப் பிடிக்கும் ஒரு வணிகக் கும்பல் தமிழகத்தை விட ஐரோப்பாவில் அதிகம் வலம் வந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியத்தைக் பேசி காசு எண்ணப் பார்க்கும் இக் கும்பலே தமிழகத்தின் ஈ.பி.ஆர்.எல்.எ.ப். ஈழத் தமிழர், இந்தியத் தமிழர், தமிழகத் தமிழர் அனைவரும் இந்த வணிகக் கும்பலை இப்போதே அடையாளம் காண வேண்டும். திராவிடர், முதல் தமிழ்த் தேசியப் போரில் செய்த அதே சூழ்ச்சியை, இவ் வடுக அடிவருடிகள் இங்கே இப்போது செய்து வருகின்றன. அன்று அடையாளம் காணத் தவறியதால் ஆண்டுகள் பல இழந்தோம் இறுதிப் போரில் இனியும் காலத்தை வீணடிக்கலாகாது,
தனி மனித வழிபாட்டை முன்னிருத்தி வடுகன் தமிழனை ஏமாற்றிப் பிழைத்தது கடந்த காலமாக இருக்கட்டும். □

**வேர்கள் இதழுக்கு வாழ்நாள் கட்டணம் செலுத்துங்கள்!**
**உருபா 500 மட்டுமே!**
**ஆண்டுக் கட்டணம் 50 உருபா மட்டுமே!**
**இன்றே செலுத்துங்கள். தமிழ்தேசப் பணியில் இணையுங்கள்.**

## வடுகனை என்றும் நம்பாதே!

"ஆரம்பப் பள்ளியில் தமிழ்! இனி ஆங்கில வழிக் கல்வி கிடையாது!"

என்று கடந்த ஆண்டு நவம்பரில் கருணாநிதி அறிக்கை வெளியிட்டதும் ஓராயிரம் முறை அதே கருணாநிதியினால் முதுகிலே குத்தப்பட்டு ஏமாற்றப்பட்ட தமிழன் எழுந்து உட்கார்ந்து, மீண்டும் முக்கி முணங்கி "தமிழினத் தலைவன்!" என்று மகிழ, அவரது பிறவிக் குணத்தை அறிந்த ஒரு சிலர் மட்டும் பொறுத்திருங்கள்... என்று எச்சரிக்க, இப்போது அவர் மீண்டும் முதுகிலே குத்தி விட்டார். மூன்று பாடங்களில் இரண்டு மட்டும் தமிழில் என்று பிதற்ற, இன்னும் அது கூட அரசு ஆணையாக வெளிவரவில்லை! நம்பிக் கெட்ட தமிழினத்தின் முதுகில் மீண்டும் மீண்டும் குத்துவதில்தான் இவ் வடுகருக்கு எத்தனை மகிழ்ச்சி!

தமிழா, நச்சு நாகத்தை நம்பினாலும்
வந்திறங்கிய வடுகனை மட்டும் நம்பவே நம்பாதே!!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காவிரியும் கருணாநிதியும் –10

பூ.அர.குப்புசாமி

காவிரியில் கர்நாடக அரசு திட்டம் தீட்டி நிறைவேற்றி வரும் திட்டங்கள்.

| எண் | திட்டத்தின் பெயர் | ஆயகட்டு (எக்டேர்களில் 1000களில்) | இறுதியாக பயன்படுத்தும் அளவு (கோடிக் கன அடிகளில்) |
|---|---|---|---|
| | தற்போதுள்ளதும் நடைபெற்றுக் கொண்டிருப்பதுமான திட்டங்கள் | | |
| 01 | அணைக்கட்டுக் கால்வாய்கள் | 77.1 | 57.7 |
| 02 | கிருட்ண இராச சாகர் | 79.1 | 61.2 |
| 03 | கான்வா | 2.0 | 1.2 |
| 04 | பைர மங்கலா | 1.6 | 1.0 |
| 05 | மார்க்கோனகள்ளி | 6.1 | 4.0 |
| 06 | எப்பஅல்லா | 1.2 | 0.4 |
| 07 | நுபு | 10.5 | 7.7 |
| 08 | சிக்கஓலே | 1.7 | 0.7 |
| 09 | மங்களா | 0.8 | 0.6 |
| 10 | சுவர்ணவதி | 2.8 | 3.6 |
| 11 | குண்டால் | 4.0 | 1.4 |
| 12 | நல்லூர் அமளிக்கரே | 1.3 | 0.3 |
| 13 | காமசமுத்திரா (எல்.ஐ.எஸ்) | 3.1 | 0.8 |
| 14. | அச்சன கோப்பலு (எல்.ஐ.எஸ்) | 2.3 | 0.6 |
| 15 | ஏமாவதி | 283.6 | 54.7 |
| 16 | ஒட்டஓலே | 7.5 | 2.4 |
| 17 | யாஆச்சி | 21.5 | 5.7 |
| 18 | கபினி | 87.9 | 85.0 |
| 19 | ஏறங்கி | 54.6 | 18.0 |
| 20 | சிக்கிடி ஓலே | 1.7 | 0.8 |
| 21 | மஞ்சன பேலே | 3.8 | 0.8 |
| 22 | தரங்கா | 7.0 | 3.2 |
| 23 | அர்க்கவதி | 8.6 | 3.4 |
| 24 | இக்கலூர் | 4.0 | 1.8 |
| 25 | தேவராசு அர்சு வர்ண கால்வாய் | 32.4 | 10.5 |
| 26 | உதுதூரகல்லா | 6.3 | 1.2 |
| 27 | கிருட்ணராச சாகர் நவீனப்படுத்துதல் | 2.0 | -- |
| 28 | சிறு வேளாண் திட்டங்கள் | 250.6 | 71.3 |
| 29 | குடிநீர் வழங்குதல் | -- | 28.0 |
| | மொத்தம் | 965.3 | 407 |
| | மேலும் கட்டப்ட உள்ள திட்டங்கள் | | |
| 30 | லட்சுமண தீர்த்தம் | 2.8 | 1.5 |
| 31 | கிருட்ணராச சாகர் விரிவாக்கம் | 45.5 | 8.2 |
| 32 | செங்கவாடி | 2.6 | 1.3 |
| 33 | லோகாபவானி | 3.0 | 2.0 |
| 34 | பூரி கல்லி நதிநீரேற்று வேளாண் திட்டம் | 3.6 | 1.4 |
| 35 | சிறு வேளாண் திட்டங்கள் | -- | 22.0 |
| 36 | மின் எடுத்தல் | | |
| 37 | மின் எடுத்தல் | | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| 38 | நீர்த்தேக்க சேதாரங்கள் | | 6.0 |
| 39 | நீராதார மின் நிலையங்கள் | | 1.0 |
| | மொத்தம் | 91.2 | 57.3 |
| | இரண்டும் சேர்த்து மொத்தம் | 1056.5 | 465.0 |


ஆக, காவிரியும் மற்றும் அதன் கிளை நதிகளிலிருந்து 37 திட்டங்களுக்கு மேலாக வகுத்து 465 கோடிக் கன அடி நீரை முற்றாக கர்நாடகம் பயன்படுத்த விரைவாகச் செயல்பட்டு வருகிறது. இவையனைத்திற்கும் மொத்தமாக "காவிரி ஒட்டுமொத்தத் திட்டம்" எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். இதில் பெரும்பாலான திட்டங்கள் முற்றுப் பெற்று விட்டன. பங்காரப்பா கர்நாடக மாநிலத்தின் முதல்வராக இருந்தபோதே, இன்னும் மூன்றாண்டுகளில் இத்திட்டங்கள் நிறைவு பெறும் என்று கூறினார். அந்த ஒட்டுமொத்தத் திட்டத்தின் கீழ் பெங்களூரின் குடிநீர் திட்டம் சேராது. சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சிக்குக் கீழே உள்ள நீர் மின் நிலையம் இதில் சேராது. மேக்கே தாட்டு அணைத் திட்டமும் சேராது.

ஆக, இவையனைத்தையும் நிறைவேற்றுவதற்கு கர்நாடகம் எந்தச் சட்டத்தையும், ஞாயத்தையும் பார்க்கவில்லை. ஒப்பந்தங்களை மீறியும், தமிழர்நாட்டு அரசின் ஒப்புதலின்றியும், நடுவண் நீர் ஆணையத்தினை மீறியும், நடுவண் நீர்வளத் துறையை மீறியும், நடுவணரசின் ஒப்புதலின்றியும், தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

இதையெல்லாம் தடுத்து நிறுத்த தமிழர் நாட்டு அரசு செய்த முயற்சிகள் மிகக் கொஞ்சமேயாகும். இவைகளைப் பற்றிய உண்மைகளையும். தமிழர் நாட்டு மக்களுக்கு ஆட்சியாளர்கள் சொல்வதில்லை. தமிழர் நாட்டில் ஓடும் காவிரி கேரளத்தின் பங்கையும்கொடுத்த பிறகு வற்றிப் போக இன்னும் 10 முதல் 15 ஆண்டுகளே உள்ளன. அதன் விளைவுகளைத் தமிழர்நாடு தாங்குமா?

தொடரும்

குறிப்பு : மேல் குறிப்பிட்டுள்ள இந்த விளத்த(விவர) மெல்லாம் கர்நாடக அரசின் நீர்வேளாண்துறை வெளியிட்டுள்ள காவிரி நீர் தகராறு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. (காண்க பக். 40-42)



## எங்கே மதச் சார்பற்ற அரசு?

திருச்சி (மகாத்மா) காந்தி அரசு பொது மருத்துவமனையினுள் அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் கோயில் இது! அரசு அலுவலகங்களில் மதச் சாயம் பூசப்பட்ட கோயில்களைக் கட்டுவதற்கு இசைவு கொடுப்பது யார்? தமிழன், தமிழ்நாடு, தமிழர் உரிமை என்று பேசினாலேயே பாய்ந்து, பதறி உளவறிய வரும் காவல் துறையின் பல்வேறு பிரிவுகள் நட்ட நடுத்தெருவில் பட்டப்பகலில் கட்டப்பட்டு வரும் இக் கோயில் குறித்து அரசுக்குச் செய்தி கொடுத்தனரா? இதைக் கட்ட இசைவு கொடுத்தவரை, உதவியவரை அடையாளம் கண்டு உளவறிந்து அரசுக்குச் சொன்னார்களா? அரசு தெரிந்த பின்னரும் கண்டு கொள்ளாமலிருந்ததா? மதச் சார்பற்ற அரசு என்பதன் பொருள் என்ன? தில்லியில்தான் காவிக் கூட்டம்! சென்னையில் உள்ள திராவிடக் கருப்புக் கூட்டம் பேசும் பகுத்தறிவு, ஒன்றே குலம், ஒருவனே தேவன்! எல்லாம் எங்கே போனது? காவிக் கூட்டம் பகலில் செய்யும். கருப்புக் கூட்டம் இருளில் செய்யும்.□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்ச்சி..

# திராவிட மாயை

(புலவர் மகிபை பாவிசைக்கோ)

இன்றைய கருநாடகத்தின் பெரும்பாலான பகுதிகள் ஒரு காலத்தில் தமிழ் மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதிகளே !

இமயத்தில் கல்லெடுத்த சேரன் செங்குட்டுவனின் முன்னோர்கள் வென்றெடுத்த **மாநீர் வேலிக்கடம்பு** என்பது கருநாடகத்தை யொட்டி மேலைக்கடல் பகுதியில் தொடங்கி மாலைத்தீவுகள் வரையிலான தீவுக்கூட்டங்களே !

குட்டுவனின் தந்தையாகிய சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் கப்பற்படைத்தளம் நிறுவப்பட்டிருந்தது இன்றைய கார்வார்ப் பகுதியிலேதான் ! காலமாற்றத்தால் தமிழர்கள் கொத்தடிமைகளாகிவிட்ட நிலையில், இன்று அதே கார்வாரில்தான் இந்தி(ய) நடுவணரசு கடற்படைக்குத் தளம் அமைத்துக் கொண்டிருக்கிறது !

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் தமிழ் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட மங்கலபுரம் தான் இன்றைய மங்களூர் !

குடகுமுனி அகத்தியர் (பதினாறாம் அகத்தியர்) என்னும் தமிழ்ச் சித்தர் தீட்டிக் கொடுத்த திட்டப்படி, காவிரியாற்றைக் கிழக்கே திருப்பிய கவேரன் என்னும் தமிழ் மன்னன் ஆண்ட குடகுமலை இன்றைய கருநாடகத்தின் ஒரு பகுதியே !

மூவேந்தர்கள் ஒன்றுகூடிப் பாரிவேள்மீது படையெடுத்து முற்றுகையிட்டதாகக் கூறப்படும் **பறம்பு** மலையும் கபிலர் ஆறும் (கபினியாறு) இன்றைய கருநாடகத்தின் பகுதிகளே !

இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறோம் என்றால் கருநாடகத் தமிழர்களைக் "காட்டுப்பாடி" யிலிருந்து "தொட்டகாடி" (பெரிய வண்டி) ஏறி வந்தவர்கள் என்று கிண்டல் செய்யும் வடுகர்கள் தாம் உண்மையிலேயே வந்தேறிகள் என்பதைத் தெளிவுபடுத்தவே !

## தொன்றுதொட்டே வாழ்பவர்களை இன்று வந்தவர்கள் பகடி செய்வதா?

கருநாடகத்தின் எழிலுக்கு எழில் சேர்க்கும் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கட்டியவன் தமிழனே ! ஏரி குளங்களை வெட்டியவனும் தமிழனே ! அணைக்கட்டுகளைக் கட்டியவன் தமிழனே ! தொழிற்கூடங்களை நிறுவியவன் தமிழனே ! எண்ணற்ற ஆலைகளையும் சாலைகளையும் சோலைகளையும் அமைத்தவனும் தமிழனே !

தங்கவயல் தங்கச்சுரங்கம் முதல் பெங்களூர் வானூர்தித் தொழிற்கூடம் வரை, சிவசமுத்திரம் புனல்மின் நிலையம் முதல் ராய்ச்சூரி அனல்மின் நிலையம் வரை, கண்ணம்பாடி அணைக்கட்டு முதல் காளிநதி அணைக்கட்டு வரை, வேலூர்-பழவீடு (பேலூர்-அளேபீடு) சிற்பக்கோயில் முதல் விதான சவுதா என்னும் சட்டமன்றக் கட்டிடம் வரை தமிழ்த் தொழிலாளிகளின் காலடிகள் படாத, தமிழ்ச் சிற்பிகளின் கைவண்ணங்கள் பொலியாத எந்த இடமுமே கருநாடகத்தில் இல்லை !

வெள்ளையர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களிலும், கருநாடகத்திலே தொழிலாளர் ஒன்றியங்களைக் கட்டியமைத்ததிலும் தமிழர்களின் ஈகமும் உழைப்பும் எப்படிப்பட்டது என்பதைப் பெல்லாரிச் சிறையின் ஒவ்வொரு பொடி மணலும் எடுத்துரைக்கும்.

கருநாடகத்தின் வளத்துக்கு வளம் சேர்த்த தமிழர்களை மட்டம் தட்டுவதற்கோ, கொச்சைப்படுத்துவற்கோ, எள்ளி நகையாடுவதற்கோ, ஏளனம் புரிவதற்கோ கருநாடகத்தின் இன்றைய அரசியலாளிகளுக்கு எந்தவித உரிமையும் தகுதியும் கிடையவே கிடையாது !

*கருநாடகத் தமிழர்களுக்கு உரிமையும் பெருமையும் எப்படி வரும்?*

தமிழ்நாட்டில் வாழும் கன்னடர்கள் மட்டும் நூற்றுக்கு நூறு பாதுகாப்புடன் வாழ்ந்துகொண்டிருக்கையில், கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் மட்டும் கன்னடர்களின் அச்சுறுத்தல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆட்பட்டு, அன்றாடம் செத்துச் செத்துப் பிழைத்துப், பிழைத்துப் பிழைத்துச் செத்துக் கொண்டிருப்பதில் எந்தவகை ஞாயமும் இல்லை.

அதே போன்று, தமிழர்களுக்கும் கன்னடர்களுக்கும் இடையிலான இனவேற்றுமையுணர்வுகள் பெருகிவிட்ட நிலையில், நாம் எல்லாரும் 'திராவிடர்கள்' என்று பேசிப் பேசி நம்மை நாமே இனியும் ஏமாற்றிக் கொண்டிருப்பதில் பொருளுமில்லை.

எனவே சட்டப்படியும், ஞாயப்படியும் கருநாடகத்தின் மொழி வழிச் சிறுபான்மை மக்களாகிய தமிழர்களுக்கு உரிய உரிமை யையும் பெருமையையும் நிலைநிறுத்துவதென்றால், **தமிழ்நாட்டின் அதிகாரப் பொறுப்புகளைத் தமிழர்களின் கைகளுக்கு மாற்றியே தீரவேண்டும்.**

## தமிழ்நாடு தனிநாடாயிருந்தால் என்ன நடந்திருக்கும்?

1947க்கு முன்பு பிரித்தானிய வெள்ளையர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாகத்தானே இந்தியாவும் பாக்கித்தானும் மியான்மரும் (பருமாவும்) இலங்கையும் இருந்தன? அந்தப் பகுதிகள் எல்லாம் இன்று தனித்தனி நாடுகளாக இருப்பதால் யாராவது பாக்கித்தானியரையும் வங்கதேசத்தவரையும் நம்மவர்கள் என்றோ, நாம் எல்லாருமே ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள் என்றோ கூறிக் கொள்ள முன்வருகிறார்களா?

அப்படிக் கூறிக்கொள்ள மறுப்பது ஒருபுறமிருக்கட்டும் ! பாக்கித்தானை அச்சுறுத்துவதற்காக அணு வெடிப்பு ஆய்வுகள் நடத்தாமல் இருக்கிறார்களா? வங்கதேச எல்லையிலே எல்லைக்காவல் புரியாமல் இருக்கிறார்களா? பருமிய மீனவர் படகுகள் புயலிலே அடித்துவரப்பட்டுக் கரையொதுங்க நேர்ந்தால், அந்த மீனவர்களும் நம்மவர்கள்தாமே என்று நம் ஊர்களுக்குள் எளிதாக நுழையவிட்டுவிடுகிறார்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவற்றையெல்லாம் செய்யாவிட்டாலும்கூட, இந்த மண்ணில் வாழும் அந்த மண்ணின் மக்களுக்கு உரிய பாதுகாப்புகளை மட்டும் தரத் தயங்குவதில்லை.

அந்த நாடுகளின் மக்கள், இந்த நாட்டுக்குள்ளே எத்தனை பேர்கள் வாழ்கிறார்கள் என்பது கணக்கன்று; எத்தகைய பாதுகாப்புடன் வாழ்கிறார்கள் என்பதே கணக்கு.

தமிழ்நாடும் கருநாடகமும் தனித்தனி நாடுகளாக இருந்திருந்தால், நம்மால் தமிழ்நாட்டுக் கன்னடர்களுக்குக் கொடுக்கப்படும் அதே பாதுகாப்பைக் கருநாடகத் தமிழர்களுக்கும் கொடுக்கும்படி வலியுறுத்தியிருக்க முடியும்.

**குட்டக் குட்டக் குனியும் வரை,**
**குனியக் குனியக்**
**குட்டத்தான் செய்வார்கள்!**

பாக்கித்தானை அச்சுறுத்துவதற்காக — ஊறன்மைக் காந்தியின் பெயரால் நூறுகோடி மக்களை ஆளும் இந்தி(ய) நடுவணரசு, அணுகுண்டுகளையும் கண்டம்தாண்டிக் கணைகளையும் உருவாக்கியிருப்பது சரிதான் என்றால்...

கருநாடகத்தில் வாழும் தமிழர்கள்மீது கைவைத்தால் தமிழ் நாட்டில் வாழும் கன்னடர்கள்மீது கைவைப்பார்கள் என்கிற அச்சம் கன்னடர்களுக்கு ஏற்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துவதும் சரியே!

ஏனென்றால், "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்பது முது மொழி!

அடிக்கு அடி, உதைக்கு உதை, மிதிக்கு மிதி, வெட்டுக்கு வெட்டு, குத்துக்குக் குத்து என்று திருப்பித் தரும் படலங்கள் தொடரும் என்று அஞ்சும்போது மட்டுமே கன்னடக் காடைகளின் ஓங்கிய கைகள் மடங்கும். கன்னட அரசியலாளிகளின் ஆணவப் பேச்சுகள் அடங்கும்.

கருநாடகத்தில் தமிழச்சிகளின் கைவளையல்கள் நொறுங்கினால், தமிழ்நாட்டில் கன்னடச்சிகளின் கழுத்துத் தாலிகள் அறுபடும் என்கிற அச்சவுணர்வு கன்னடவெறியர்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

கருநாடகத்திலே தமிழனின் முதுகிலே அடித்தார்கள் என்பதற்காகத் தமிழ்நாட்டிலே கன்னடனின் மூஞ்சியிலே அறைந்தார்கள் என்னும் செய்திகள் வெளிவரத் தொடங்கினால், கன்னடர்களும் சிந்திக்கத் தொடங்குவார்கள்.

குட்டக் குட்டக் குனிகிறவர்கள் மட்டுமே முட்டாள்கள் அல்லர்; குனியக் குனியக் குட்டியவர்களும் முட்டாள்களே என்கிற நடப்பு உண்மை கன்னடர்களுக்குத் தெளிவாக்கப்பட வேண்டும்.

**தலைமைப் பொறுப்புகள்**
**திராவிடனிடமிருந்து**
**தமிழன் கைக்கு மாற வேண்டும்!**

தமிழர்களுக்குத் திராவிடன் தலைவனாயிருக்கும் வரை, தமிழினத்திற்கு முன்னேற்றம் ஏற்படாது.

தன்னை நூற்றுக்கு நூறு தமிழனாக மட்டுமே கருதுகின்ற — எந்த நிலையிலும், எதன் பொருட்டும் தன்னை 'இந்தி'யனாகவோ 'திராவிட'னாகவோ கருத மறுக்கிற — தமிழனின் தலைமைதான் தமிழர்களுக்கு வேண்டும்.

*"தமிழாய்ந்த தமிழன்தான்*
*தமிழ்நாட்டின் முதலமைச்சாய்*
*வருதல் வேண்டும்"*

என்று புரட்சிப் பாவேந்தர் பாடியதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தமிழாய்ந்த வடுகனுக்கு அவ்வாய்ப்பைத் தந்துவிட்டுக் கொத்தடிமை நிலையிலிருந்து மீள முடியாமல் தத்தளிக்கிறது தமிழினம்!

என்னதான் தமிழாய்ந்திருந்தாலும், தமிழால் தன்னை வளர்த்துத் தன் வளவாழ்வைப் பெருக்கிக் கொண்டிருந்தாலும், தன்னைத் தமிழனாகக் கருதாமல் வேறு எவனாகவோ கருதிக் கொண்டிருக்கின்ற திரிவடுகனால் எப்படித் தமிழினத்தின் உரிமைக்குக் குரல் கொடுக்க முடியும்?

எடுத்துக்காட்டாக, ஒரு புல்னத்தை இங்கு நினைவு படுத்துகிறோம்:

நம்மை அடக்கியாளும் வடக்கனிடம் 'ஈ' என்று இளித்துக் கொண்டே தன்னை 'இந்தி'யன் என்று விளித்துக் கொள்கிற 'திராவிட'னான கருணாநிதியின் ஆட்சியில்தான், *மனோன்மணீயம்* சுந்தரனாரின் *"நீராருங் கடலுடுத்த..."* என்னும் பாடல், *தமிழ்த்தாய் வாழ்த்துப்* பாடலாக அறிவிக்கப்பட்டது. அப் பாடலிலே வரும் *"ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையா"* என்கிற வரிமட்டும் நீக்கப்பட்டுவிட்டது! அதன் மூலம், *"எங்குப் பிறப்பினும் தமிழன் தமிழனே! இங்குப் பிறப்பினும் அயலான் அயலானே!"* என்கிற மற்றோர் உண்மையும் மெய்ப்பிக்கப்பட்டது.

தமிழர்களின் தற்சார்புக்கும், தன்மதிப்புக்கும் உரமூட்டுவதற்காகவே *மனோன்மணீயம்* என்கிற பாவியத்தை இயற்றிய பச்சைத் தமிழரான சுந்தரனாரால் அதனைத் தனித்தமிழில் பாட இயலவில்லை.

அதற்கான காரணத்தைக் *"கொடுமலையாளக் குடியிருப்பு உடையேன்"* என்று அவரே கூறுகிறார். செந்தமிழ் அல்லாத கொடுந்தமிழ் வழங்கிய மலையாளப் பகுதியில் வாழ்ந்திருந்தாலும், அவர் உணர்வுகளால் செம்மாந்த செந்தமிழரே!

எனவேதான்,

*"வள்ளுவர்செய் திருக்குறளை*
*மருவறநன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மநுவாதி*
*ஒருகுலத்துக் கொருநீதி?"*

என்று அவரால் தீமையைச் சாடிச்சாடிப் பாட முடிந்தது.

ஆனால்...

செந்தமிழ் பேசும் தஞ்சை மாவட்டத்திலேயே பிறந்திருந்தாலும், தமிழன் ஒருவனுக்கு இருந்தே தீரவேண்டிய *தன்மான உணர்ச்சி* அறவே இல்லாத 'திராவிட'னான கருணாநிதியோ, தன்னை "மனு நீதிச் சோழன்" என்று அழைத்துக்கொண்ட மட்டமான பேர்வழி!

தமிழர் நெறிக்குப் புறம்பான ஆரியக் கோட்பாட்டின் அடிவருடியும், தமிழினத்தின் தன்மதிப்பைத் தீய்க்கும் இந்தி(ய) தேசிய ஒருமைப்பாடு என்கிற இழிபரத்தைக் கோட்பாட்டைத் தலைவணங்கி ஏற்றுக்கொண்டிருக்கும் கொத்தடிமையுமான கருணாநிதியால் எப்படித் தமிழினத்தின் உரிமைகளைக் காக்க முடியும்?

**தாய்வாழை மரம்**
**தழைக்க வேண்டுமானால்,**
**பக்கக் கன்றுகள்**
**பெயர்க்கப்பட வேண்டும்!**

"தாயானாலும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு வேறு" என்பார்கள்.

www.tamilarangam.net

கன்னடமும் தெலுங்கும் மலையாளமும் தாய்த் தமிழிலிருந்து கிளைத்த மொழிகளே என்றாலும், அந்த மொழிகளைப் பேசும் மக்கள், தாய்த்தமிழின் வளர்ச்சியையும் தமிழனின் வளர்ச்சியையும் தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள் அல்லர்.

தாயின் வயிற்றிலிருந்து வெளிவரும் தேள்குஞ்சுகள் தாய்த்தேளையே உணவாக்கி வளருமாமே! அப்படிப்பட்டவர்களே கன்னட, தெலுங்க, மலையாளிகளான 'திராவிடர்கள்'!

தாய்வாழை மரத்தைச் சுற்றிலும் ஏராளமான பக்கக்கன்றுகள் வெடிக்கும். அவற்றையெல்லாம் முதலிலேயே மிதித்து அழித்துவிடுவார்கள்; அல்லது அவற்றையெல்லாம் பெயர்த்து வேறு வேறாக நட்டுவிடுவார்கள். அப்படிச் செய்யாவிட்டால், தாய்வாழை மரத்தைச் **சவலைமரமாக்கிப்** பக்கக் கன்றுகளே பெரிது பெரிதாக வளர்ந்துவிடும்.

தாய்த்தமிழிலிருந்து கிளைத்து ஒன்று பலவான தமிழிய (திராவிட) மொழியினங்கள் இன்று அப்படித் தான், தாய்த்தமிழினத்தின் வளர்ச்சிக்குக் **கெடும்பு செய்யும் இனங்களாகிவிட்டன.**

கன்னட, மலையாள, தெலுங்கு இனங்கள் தனித் தனி இனங்களாக வளர்ந்து கொள்ளட்டும்! ஆனால், தமிழர்களை மட்டம் தட்டிவிட்டுத் தெலுங்கர்களும் கன்னடர்களும் மலையாளிகளும் தமிழர்களிடையே கொட்டமடிக்கும் தலைவர்களாகியிருப்பதை நம்மால் எப்படி ஏற்க முடியும்?

## குயினி செய்த பிழையால்தானே விசயனின் இனம் கொடுங்கோலோச்சுகிறது?

இலங்கையை ஆண்ட இளவரசியான **குயினி** என்பவள், வடக்கத்தி வடுக வந்தேறியும், தகப்பனாலேயே துரத்தியடிக்கப் பட்ட ஓடுகாலியுமான **விசயனுக்குத்** தமிழர் மண்ணில் புகலிடம் கொடுத்து அவனை மணந்துகொண்டு, அவனுடன் வந்த இளைஞர்களுக்கும் உள்ளூர்ப் பெண்களை மணமுடித்துக் கொடுத்ததால்தானே **சிங்கள இனம்** உருவாகியது?

அப்படிப் பிறந்து பல்கிப் பெருகிய சிங்கள இனம்தானே இப்போது இலங்கைத் தீவிலே பெரும்பான்மை இனமாகி, "ஒண்ட வந்த வெளியூர்ப் பேய் உள்ளூர்ச் சேய்களை விரட்டியடித்த" கதையை மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது?

*தமிழீழத்தில்* விடுதலைப் போராட்டங்கள் வெடித்துத் **தமிழீழ விடுதலைப்புலிகளின் கைகள் ஓங்கியதைத்** தொடர்ந்து, கன்னடர்களிடையே தமிழினத்தைப் பற்றிய அச்சவுணர்வுகள் தலைதூக்கின. தமிழினத்தை மதிக்க வேண்டும் என்கிற எண்ணமும் கன்னடர்கள் சிலரிடம் ஏற்பட்டது. தாழ்வுணர்ச்சிகளால் தலைதொங்கிக் கிடந்த கருநாடகத் தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்கவும் தலைப்பட்டார்கள்.

ஆனால், கோலெடுத்தால் ஆடும் குரங்கு போன்று, 'இந்தி'யன் ஆட்டிவைத்தபடி எல்லாம் ஆடித் தமிழ் நாட்டை மட்டும் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் "திராவிடத் தலைவர்கள்", தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து விடுதலைப் புலிகளின் முதுகிலே குத்தியதைத் தொடர்ந்து, கன்னடர்களின் மனப்போக்குகள் மாறிவிட்டன. அதன் எதிரொலிதான் கருநாடகத் தமிழர்களை உலுக்கிய 1991ஆம் ஆண்டு காவிரிக் கலவரங்கள்!

## நெஞ்சறிந்தே வஞ்சிக்கப்பட்ட மண்ணின் மைந்தர்கள்!

ஒரு காலத்தில் பெங்களூரைச் சுற்றிலுமிருந்த நிலங்கள் பெரும்பாலும் தமிழர்களில் ஒரு பிரிவினரும், பெங்களூர் மண்ணின் சொந்த மைந்தர்களுமான திகிழர்களிடமே இருந்துவந்தன. கே. சி. ரெட்டி என்னும் தெலுங்கர் கருநாடக முதல்வரான பிறகு, திகிழர்களின் நிலங்கள் தெலுங்கு ரெட்டிகளால் நயவஞ்சகமாகவும் அடாவடித்தனமாகவும் பறித்துக்கொள்ளப்பட்டன! வந்தேறித் திராவிடர்களிடம் வாழ்வுரிமைகளைப் பறிகொடுத்த திகிழர்கள், தங்களின் சொந்த நிலங்களிலேயே கொத்துக் கூலிகளாக்கப்பட்டனர்!

பெங்களூரைச் சுற்றிலும் தொழிற்சாலைகள் பெருகப் பெருகத் தமிழர்கள் இழந்த நிலங்களின் அங்காடி மதிப்பும் பல மடங்கு அதிகமாகிவிட்டது. அதனால்தான், 'கன்னடர்கள்' என்கிற முகமூடிகளை அணிந்துகொண்டுள்ள தெலுங்கர்களால் வலுவான பொருளியல் அரசியல் பின்னணிகளோடு கருநாடகத்தில் முற்றுரிமை செலுத்தவும், பெங்களூர் மண்ணின் உண்மையான மைந்தர்களாகிய தமிழர்களை அச்சுறுத்தி ஆட்டிப்படைக்கவும் முடிகிறது!

ஆனால்...

தேவையற்ற திராவிட மயக்கத்தால் தங்களின் வாழ்வுரிமைகளை இழந்த தமிழர்களோ, உதை தின்னி மாங்கொட்டைகளாகி விரல்களைச் சூப்பிக் கொண்டு திரிகின்றனர்!

## கோயில் நிலங்களைப் பங்கிட்டுக் கொண்டனர்; குறைசொன்ன தமிழனைச் சதிசெய்து கொன்றனர்!

கருநாடகத்தில் தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தவும் நிலைநிறுத்தவும் உதவுகிற வரலாற்றுச் சான்றுகள் பல கன்னடர்களால் எப்படியெல்லாம் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன என்கிற செய்தியைப் பெங்களூர் எங்களூர்! என்னும் நூலின் வாயிலாக அறிஞர் குணா அவர்கள் வெளிப்படுத்தினார்கள். தும்பளூரில் (தொம்ளூரில்) சோழர்களால் கட்டப்பட்ட கோவிலிலிருந்த தமிழ்க் கல்வெட்டுகள் பெயர்த்தெடுக்கப்பட்ட செய்தியை குணா அவர்களின் பெங்களூர் எங்களூர்! அம்பலப்படுத்தியது.

தும்பளூரில் நடந்ததைவிடப் பெரிய கொடுமை அலசூரில் இராசேந்திர சோழனால் கட்டப்பட்ட சோமேசுவரன் கோயிலிலும் நடந்துள்ளது. சோமேசுவரன் கோயிலிலிருந்த தமிழ்க் கல்வெட்டுகளிலெல்லாம் மஞ்சள், சிவப்பு வண்ணங்களைப் பூசித் தமிழ் எழுத்துகளை மறைத்தார்கள்! அழகிய கலைநயமிக்க சோமேசுவரன் கோயில் தேரிலே தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்த ஒரே காரணத்திற்காக, அந்தத் தேரையே தீயிட்டுக் கொளுத்தினார்கள்!

கொடுமைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போன்ற பெருங்கொடுமை யொன்றையும் தெலுங்கு ரெட்டிகள் நடத்திக் காட்டினார்கள். சோமேசுவரன் கோயிலுக்கு மானியமாக வழங்கப்பட்டிருந்த (இறையிலி) நிலங்கள் கோடிக்கணக்கில் மதிப்புடையவையாகும். திருட்டுப் புரட்டுகளிலும் ஆவணத் திருத்தல் மோசடிகளிலும் கைதேர்ந்தவர்களான தெலுங்கு ரெட்டிகள் சிலர், அந் நிலங்களைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டு நல்ல விலைக்கு விற்றுத் தள்ளினார்கள்!

சாந்திநகர்த் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராயிருந்த பி. டி. கோவிந்தராசு என்னும் தமிழர், இந்த நிலமோசடியைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளான ரெட்டிகள்மீது வழக்குத் தொடர முற்பட்டார்.

அதன் விளைவு?...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடல்நலம் குன்றிப் படுக்கையில் படுத்திருந்த கோவிந்தராசுவுக்கு அவருடைய நண்பர் ஒருவர் இறந்துவிட்டதாக ஒரு பொய்ச் செய்தி கிடைத்தது. உடனே பதறிப்போய், இறந்துவிட்டதாகச் சொல்லப் பட்ட நண்பருக்கு இறுதி வணக்கம் செலுத்துவதற்காக வீட்டைவிட்டுக் கிளம்பிய சிறிது தூரத்திலேயே அவர் மீது சரக்கி (லாரி) யொன்றை மோதவைத்துத் துடிக்கத் துடிக்கச் சாகடித்தனர் அந்த ரெட்டிகள் !

கோயில் சொத்துகளைக் கொள்ளையடிப்பது பாவம் என்று எச்சரிப்பதற்காகவே "சிவன் சொத்து குலநாசம்" என்னும் பழமொழி வழக்காற்றில் இருக் கிறது. ஆனால், கருநாடகத் தமிழருக்கு இழைக் கப்பட்ட கொடுமையோ நேர்மாறானது. சிவன் சொத்தைக் கொள்ளையடித்த 'திராவிடத்' திருடர்கள், செழித்துக் கொழித்துக் களித்துக் கொண்டிருக் கிறார்கள் ! கோயில் அறங்காவலர் என்னும் கடமை யுணர்வோடு அக் கொள்ளையைத் தட்டிக்கேட்ட தமிழரோ சிவனுக்காக உயிரையே போக்கிக் கொள்ள நேர்ந்தது !

கருநாடகத்தில் சட்டப்பேரவை உறுப்பினரா யிருந்தவருக்கே இந்த நிலை என்றால், எந்த வகை யான பிடிப்பும் வலுவுமற்ற அன்றாடங்காய்ச்சித் தமிழர்களால் எப்படித் 'திராவிட' வல்லாண்மை வெறியர்களை எதிர்த்துத் துணிச்சலுடன் போராடி வெற்றிபெற முடியும்?

ஒரு காலத்தில் 40,000 தொழிலாளர்கள் பணி யாற்றிய தங்கவயல் சுரங்கங்களைப் படிப்படியாக மூடி இப்போது 4,000 தொழிலாளர்கள் மட்டுமே பணியாற்றும் அளவுக்குக் குறைத்து விட்டார்கள். ஏனென்றால், அங்கே பணியாற்றியவர் **அனை வருமே தமிழர்கள் !**

இழப்பே இல்லாமல் இன்னும் 50 ஆண்டுகளுக்கு வெட்டி யெடுக்கத் தேவையான படிவங்கள் இருந் தாலும்கூடத் **தமிழர்களை வெளியேற்றிவிட்டுப்** பன்னாட்டு நிறுவனங்கள் சிலவற்றுக்கு அச் சுரங் கங்களை விற்றுவிடுவதற்கான சதிவேலைகளில் சுரங்க மேலாண்மை இறங்கியிருக்கிறது !

### அகவம் (வர்க்கம்) சமயம் இரண்டையும் கடந்த மொழி வேற்றுமை !

பெங்களூரில் ஒரு காலத்தில் மளிகைக் கடை களும் தரகு மண்டிகளும் பெரும்பாலும் இசுலா மியத் தமிழர்களிடமே இருந்துவந்தன. இப்போதோ, பெரும்பாலான மளிகைக்கடைகளும் பெட்டிக்கடை களும் மலையாளிகள் கைகளுக்கு மாறிவிட்டன !

பொதுவாகவே, மலையாளிகள் கேரளாவுக்கு வெளியே வந்துவிட்டால், **பிழைப்பதில்** மட்டுமே கண்ணும் கருத்துமா யிருப்பார்கள். தமிழர்களைப் போன்று கட்சி அரசியலிலெல்லாம் தலைகளை நுழைத்துக் கொடிதூக்கியும் தோரணம் கட்டியும் சீழ்க்கை (விசில்) அடித்தும் சீரழிய மாட்டார்கள். அதற் கான குத்தகையாளர்கள் தமிழர்கள் மட்டுமே! கருநாடகத் தமிழர்கள் இப்படி அடி உதைபட்டுச் சாவதற்கான **காரணமும்** அது மட்டுமே !

அரசியல் களங்களில் ஏனைய 'திராவிடர்'களைப் போலன்றி வெறும் அடிமட்டத் தொண்டர்களாக மட்டுமே உழன்று கொண்டிருக்கும் கருநாடகத் தமிழர்களை, இந்தி(ய) தேசியம், 'திராவிடத்' தேசியம் உள்ளிட்ட எந்தப் புடலங்காய்த் தேசியமும் சீண் டியதுமில்லை; தீண்டியதுமில்லை !

மாறாக ... கருநாடகத்தைச் சேர்ந்த **தமிழ்த் தொழிலாளிகளைக் கன்னடத் தொழிலாளிகளும்** தெலுங்குத் தொழிலாளிகளும் ஒன்றாகச் சேர்ந்தே உதைத்தார்கள். எதனால் என்பதைத் தமிழ்நாட் டின் மார்க்சிய-லெனினியத் தோழர்கள் ஆராய்ந்து பார்க்கட்டும் !

கருநாடகத்தைச் சேர்ந்த தொல்தமிழர்களை, ஆதி கன்னடர்களும் ஆதிஆந்திரர்களும் கைகோத்துக் கொண்டே தாக்கினார்கள் ! ஏன் என்பதை இரட்டை **மலை சீனிவாசன்களையும் அயோத்திதாசப் பண்டி தர்களையும்** ஓரங்கட்டிவிட்டு, அண்ணல் அம்பேத் கரின் பெயரை மட்டுமே ஒலித்து ஒலித்துப் பழகிய தோழர்களே ஆய்வு செய்யட்டும் !

மண்டையத்தையும் மலைவள்ளியையும் கொள் ளேகாலத்தையும் சேர்ந்த தமிழ்பேசும் உழவர்களின் தோட்டங்களையும் வயல்காடுகளையும், கன்னட நிலக்கிழார்களும் கன்னடம்பேசும் தோட்டக்கூலி களும் கைகோத்துக்கொண்டே எரித்தார்கள் ! காவிரி யின் பெயரால் நடத்தப்பட்ட கருநாடகக் கீழவெண் மணிக் கொடுமைகளின் உண்மையான பின்னணி என்ன என்பதை **நாராயணசாமி நாயுடு** காலத்தி லிருந்தே 'திராவிடர்'களை மட்டுமே வழிகாட்டி களாக ஏற்றுப் பச்சைத்துண்டுகளுடன் பசுமைப் புரட்சி செய்துகொண்டிருக்கும் 'பச்சைத்' தமிழர் கள் ஆராய்ந்து பார்க்கட்டும் ! மொழிவேற்றுமை களைக் கடந்து **அகவ(வர்க்க)ப் போர்** நடத்த எல் லாருமே சேகுவேராக்களும் அல்லர் ! இந்த நாடு கியூபாவும் அன்று !

பொதுவாகவே, எந்தவிதமான வம்புதும்புகளுக் கும் போக விரும்பாதவர்களான கருநாடகத் தமிழ்க் கிறித்துவர்கள், தங்களின் தாய்மொழியில் திருப்பலி (வழிபாடு) நடத்தக் கூடாது என்று கன்னடர் எனக் கூறிக்கொள்ளும் தெலுங்கு ரெட்டிக் கிறித்துவர்களும், கிறித்துவரேயல்லாத காடைகளும் கூடிக் குழப்பம் விளைத்தார்கள் ! இதெல்லாம், தெலுங்கு—கொங் கணிப் பாதிரியார்களுக்கே வெளிச்சம் !

இப்படிப் பாட்டாளித் தமிழர்களைக் கன்னடப் பாட்டாளிகளே தாக்குவதும், தொல்தமிழர்களைத் தொல்கன்னடர்களே தாக்குவதும், தமிழ் வேளாளர் களைக் கன்னட உழவர்களே தாக்குவதும், தமிழ்க் கிறித்துவர்களைக் கன்னடக் கிறித்துவர்களே தாக்கு வதும் எதனால்?

அகவம் (வர்க்கம்), குலம், சமயம் இவற்றையெல் லாம் கடந்த மொழி-இனவேற்றுமை உணர்வுகள் தான் கருநாடகத்தில் தலைதூக்கியிருக்கின்றன என் பது விளங்கவில்லையோ? தமிழரல்லாத 'திராவிடர் கள்' வேறு யாரை வேண்டுமானாலும் வாழவிடுவார் களே யொழியத் தமிழர்களை மட்டும் வாழவிடவே மாட்டார்கள் என்பதே கசப்பான உண்மை !

'புதிய தமிழகம்' சமைப்பதற்குத் தமிழ்நாட்டிலே தமிழன் தலைமையே கிடைக்கவில்லையென்று குருவா ரெட்டி என்னும் சாதியைச் சேர்ந்த தெலுங் கனான பர். கிருட்டிணசாமி என்னும் பேர்வழியின் தலைமையை ஏற்றுச் சாதிச் சண்டைகளில் வெட்டிக் குத்திக்கொண்டு மடியும் தமிழர்கள் மீண்டும் மீண் டும் சிந்திக்கட்டும் !

### கருநாடகத் தமிழர்களைத் தமிழ்நாட்டுத் தமிழர்களால் காக்க முடியுமா?

சேலை இல்லையென்று இரவல் கேட்பதற்காகச் சித்தி வீட்டுக்குப் போயிருந்தாளாம் ஒருத்தி. சித் தியோ, அவளுக்கே சேலை இல்லாமல் ஈச்சம் பாயை உடம்பிலே சுற்றிக்கொண்டு எதிரில் வந்து நின்றாளாம் !

தாங்கள் படும் தொல்லைகளிலிருந்து தங்களை விடுவிப்பார்கள் என்று தமிழ்நாட்டு மக்களைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருநாடகத் தமிழர்கள் நம்புவதும் அப்படித்தான் இருக்கிறது!

"தன் கையே தனக்கு உதவி" என்பார்கள். கருநாடகத் தமிழர்களைப் பொறுத்தவரை, தங்களின் கால்களை வலுவாக ஊன்றித் தங்களின் சுமைகளைத் தங்களின் தோள்களிலேயே தாங்கிக்கொள்ள வேண்டும்.

**"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று"**

என்பது குறள்.

கருநாடகத் தமிழ் இளைஞர்கள் அரசுப்பணிகளுக்கெல்லாம் அலைமோதுவதை விட்டுவிட்டு, ஆங்காங்கே குழுக்கள் குழுக்களாக இணைந்து கூட்டுறவு முறையில் சிறுசிறு தொழிற்பட்டறைகளையும், வாணிக முனைப்பகங்களையும் தொடங்க முற்பட வேண்டும்.

செயலூக்கமும் மதிநுட்பமும் கொண்ட தமிழ் இளைஞர்களால் எதையும் செய்ய முடியும் என்பதே நம் கருத்து.

கருநாடகத் தமிழர்கள் முதலில் தாழ்வுமனப்பான்மைகளிலிருந்து விடுபட வேண்டும். அதற்கு முதற்படியாகத் 'திராவிட' மாயையிலிருந்து விடுபட்டுத் 'திராவிட' இயக்கங்களின் கொடிமரங்களை விட்டு நெடுந்தொலைவுக்கு விலகி நிற்க வேண்டும்.

## ஆரிய மாயையைவிட ஆயிரம் மடங்கு தீங்கானது திராவிட மாயை!

தமிழர்கள் தூங்கிக்கொண்டிருந்த வேளையிலே, இருட்டு வீட்டுக்குள் திருட்டுப் பூனைகள் நுழைந்தது போன்று தமிழ்நாட்டுக்குள் நுழைந்து, கொள்ளையடித்த களப்பாளர் (களப்பிரர்) களின் பிறங்கடைகளான வடுக வந்தேறிகள், தூங்கிக்கொண்டிருந்த தமிழர்களைத் தட்டியெழுப்பியவர்கள் தாங்கள் தாம் என்று வாய்கிழியப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்! ஆரிய மாயையிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்று, அவர்களில் சிலர் அடுக்கடுக்கான காரணங்களை அடுக்கிக் காட்டியதும், அப்போது அவர்களை வானமண்டலத்திலிருந்து இறங்கி வாழ்விக்க வந்த தேவர்கள் என்றே தமிழர்கள் நம்பியதும் உண்மையே!

ஆனால், எண்ணெய்க் கொப்பரைக்குத் தப்பி, நெருப்புக் குண்டத்திலேயே வீழ்ந்துவிட்ட கதைதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. பத்திநெறியின் பெயரால் பூசாரிகளின் கால்களில் விழுந்து வணங்கிய நிலை மாறி, 'பகுத்தறிவின்' பெயரால் பரத்தைக் கும்பலின் கால்களில் விழுந்து வணங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது!

அதாவது, எந்த ஆரிய மாயையிலிருந்து தமிழர்களை விடுவிப்பதாகச் சொல்லித் 'திராவிடர்கள்' நம்மிடம் ஏற்றம் மேற்கொண்டார்களோ, அந்த ஆரிய மாயையைவிட ஆயிரம் மடங்கு தீங்கு செய்து, தமிழினத்தின் தன்மதிப்பை நாறடித்துக் கொண்டிருப்பது 'திராவிட' மாயைதான் என்பது தெளிவாகிவிட்டது.

எனவே, தமிழ்நாட்டுத் தமிழர்கள் முதலில் விடுபட வேண்டியது 'திராவிட' எத்தர்களின் கொடும்பிடிகளிலிருந்துதான்!

எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகு தமிழர்களின் தன்னுரிமை உணர்வுகளும் தன்மான உணர்வுகளும் கூர்மையடைந்ததன் விளைவாகத் தமிழீழத்திலே இனவுரிமைப் போராட்டங்கள் வெற்றிக்கட்டத்தை எட்டியிருக்கும்போது, தமிழ்நாட்டிலே சாதிப் பூசல்களைத் தூண்டிவிட்டுக் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறது இந்தத் 'திராவிட' அரசியல் தெகிடுதத்தக் கும்பல்!

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். பச்சைத் தமிழர்கள் ஒருவருக்கொருவர் மல்லுக்கு நின்றால்தானே இந்தத் திராவிட வந்தேறிகள் சொல்லும் சொல்லுக்கு மதிப்பிருக்கும்?

## தமிழர் தலைமை ஓங்கட்டும்! திராவிட மாயை அகலட்டும்!

தமிழீழ விடுதலைப் போரிலே இதுவரை 50,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியாகியிருக்கிறார்கள்! இலக்கக் கணக்கான தமிழர்கள் ஏதிலிகளாக்கப்பட்டிருக்கிறார்கள்! பல்லாயிரம் கோடிச் சொத்துகள் சூறையாடப்பட்டுள்ளன! இத்தனைக்கும் பிறகும் கூடப் "பணம் என்றால் தனக்கு; பதவி என்றால் தன் மருமகனுக்கு!" என்னும் குடும்ப அரசியலைத் துறக்க விரும்பாமல் இந்தியனுக்கு அடிவருடி, சிங்களனுக்கு முடி நெருடி விட்டுக்கொண்டிருக்கும் திரிவடுகப் பொட்டுக்கட்டித் தட்டுவாணிக் கும்பலால் தமிழ்நாட்டு மக்களிடையே "இனமானம்" பேசி ஏமாற்றிக்கொண்டிருக்க முடிகிறதே, எப்படி?

மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகவும், ஆணித்தரமாகவும் கூறுகிறோம்:

தமிழீழ மக்களின் இன்றைய அவலங்களைக் கண்ட பிறகும்கூடத் தன்னுடைய பட்டம் பதவிகளை மட்டும் கட்டிக்காத்துக் கொண்டால் போதும் என்கிற நசையுணர்வால், தமிழீழ விடுதலையை ஒப்பேற்க மறுக்கிற ஒருவன், தன்னை இன்னும் கூடத் தமிழர்களின் "இனமானத் தலைவன்" என்று கூறிக்கொள்கிறான் என்றால்,

**"அவனைப் — பெற்றவள்மேல் ஐயம்**
**அவன் — பிறப்பின்மேல் ஐயம் — எனச்**
**சற்றும் தயக்கமின்றிச் சாற்றுவோம்!"**

தமிழீழ விடுதலையின் மூலம் தமிழினத்திற்கு வாழ்வு வந்துவிடப் போகிறதே என வயிறெரியும் — அதுவும் பொட்டுக் கட்டி வீட்டில் ஆண்குழந்தை பிறந்தால் வயிறெரிவார்களாமே அப்படி வயிறெரிந்து சாகும் — வந்தேறித் 'திராவிடன்' தமிழர்களின் "இனத்தலைவன்"?

"மன்னுயிர் வருத்தம் கண்டும்
வாழ்வதே வலிக்குமாயின்
அன்னவர் ஆண்மை யாவது
அலிபெற்ற அழகு போலாம்"

என்னும் திருத்தக்க தேவரின் வாய்மொழியை அப்படியே மெய்ப்பிக்கும் வகையில், தமிழ்நாட்டில் பிறந்து, தமிழால் வாழ்வும் வளமும் பெற்றுப் பட்டம் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருந்தாலும் தமிழினத்திற்கு இரண்டகம் மட்டுமே புரிந்துவருகின்ற திரிவடுகப் பொட்டுக்கட்டிகளே!...

— உங்களின் சொந்த நலன்களுக்காக இத்தனை காலமும் தமிழனைத் திராவிடனாக்கி நோகடித்ததும் சாகடித்ததும் போதும்! இனியாகிலும் தமிழனைத் தமிழனாகவே வாழவிடுங்கள்! தமிழனின் தாய்நாட்டைத் தமிழனே ஆளவிடுங்கள்!

"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!" என்று நுனிநாக்கால் பேசிவிட்டு அடிமனத்தில் மட்டும் தமிழினத்தை அழுத்துவதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கும் 'திராவிடர்'களே ஆளும் வரை, தமிழுக்கும் தமிழனுக்கும் எங்குமே மதிப்புமிருக்காது; எதிலுமே பிடிப்புமிருக்காது!

எனவே, தாய்த்தமிழ்நாட்டுக்கும் தமிழினத்திற்கும் இனிமேல் தமிழனின் தலைமைதான் வேண்

காண்க பக். 20



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ச்சி . . .

# புதுச்சேரி தமிழர்களின் வாசலில்லா வீடு

## அவர்கள் வளர்பிறையாகத் தமிழரோ தேய்பிறையாகினர்

வாணிபத்தைத் தொடர்ந்து கொடியும் செல்லும்' என்ற கூற்றுப்படி வாணிபச் சந்தடிச்சாக்கில் வந்தேறிய பிரெஞ்சு பேரரசு தமிழகத்தின் பருத்தி ஆடைகளுக்கும், மிளகு, கிராம்பு, ஏலம் போன்ற வாசனைப் பொருட்களுக்கும் விலையாக அவர் நாட்டின் தங்கத்தையும் வெள்ளியையும் இழக்க விரும்பவில்லை. எனவே, பிரெஞ்சு வந்தேறிகள் புதுவையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலுமுள்ள மற்ற அரசாட்சியில் நிலவி வந்த நிலையற்ற அரசியல் தன்மையையும் குறுநில அரசர்களுக்கிடையே சண்டைச் சச்சரவுகள் நிலவிய சூழலையும் சாதகமாகக் கொண்டு தமிழக நிலப்பரப்பினைத் தம்வயமாக்கிக் கொண்டனர். அதன்மூலம் கிடைத்த சுங்கவரி, நிலவரி உட்படப் பல வரிகளைக் கொண்டும் புகையிலை, சாராயம் போன்ற போதைப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டும் தங்களின் குவை(நிதி)யைப் பெருக்கி வலிமை பெற்றனர்.

தமிழர் நாட்டின் சில பகுதிகளையும் புதுவையின் சில பகுதிகளையும் தம்வயம் வைத்திருந்த மொகலாயர்களுக்கும், மராத்தியர்களுக்கும் இடையே நடந்த போர் காரணமாக ஏற்பட்ட வறுமையில், புதுவையில் அடிமைகள் மிகக் குறைவான விலைக்குக் கிடைத்தனர். வந்தேறி பிரெஞ்சு அரசின் முதல் புதுவை ஆளுநனான லெநுவார் (1721-1735) ஆடவரும் பெண்டிரும் அடங்கிய நூறு தமிழர்களை அடிமைகளாக வாங்கி பிரெஞ்சு மற்றும் பூர்பேன் தீவுகளுக்கு அனுப்பினார். பிரெஞ்சுக்காரர்களின் குளம்பி (காப்பி), தேயிலை, சணல் மற்றும் பருத்தி தோட்டங்களில் கொத்தடிமைகளாகத் தொல்தமிழர்கள் பலர் துன்புறுத்தப்பட்டு வந்தனர். தமிழ் நிலமதில் தமிழ் மக்களின் உழைப்பில் உண்டு கொழுத்து வந்த ஆளுநன் துய்மா, தமிழர்களை ஒரு பொருட்டாகவே மதியாமல் எள்ளி நகையாடினான். வந்தேறிகள், தமிழர்களின் வரிப்பணத்தில் உடுத்து, குடித்து, புகைத்து வாழ்ந்தனர். **விடுதலை, சமத்துவம், உடன்பிறப்பியம்** ஆகிய கோட்பாடுகளை உலகிற்கு தந்த பிரெஞ்சு நாட்டினர் தாங்கள் வந்தேறிய பிரெஞ்சுத் தமிழகப் பகுதிகளில் அவற்றை நடைமுறைப்படுத்திய விதம் நகைப்பிற்குரியது. 1758-61 வரை கொலுபீடத்திலிருந்த லல்லியோ தமிழர்கள் யாரும் தன் வீட்டினுள் நுழையக்கூடாது என்று தடை விதித்திருந்தான்.

பிரெஞ்சு வந்தேறி வல்லரசு பிரெஞ்சுத் தமிழர்களை அரசியல் விடுதலையற்ற ; உரிமைகளற்ற அடிமைகளாய் வைத்திருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் புதுவை மண்ணில் காலடி வைத்த காலம் தொட்டே **'நாங்கள் ஆளும் இனம், நீங்கள் அடிமைகள்'** என்ற கண்ணோட்டத்துடன் இனப்பாகுபாடுகளிலும், நிறவேற்றுமைகளிலும் மூழ்கிப் புதுச்சேரியை **'வெள்ளை நகரம்'** என்றும் **'கருப்பு நகரம்'** என்றும் பிரித்துப் பல தடைகள் விதித்திருந்தனர்.

உலகுக்கே நாகரிகத்தைக் கற்பித்த தாய்த் தமிழகத்தின் வரலாற்றைத் திரித்தும், எல்லா மொழிகளுக்கும் வித்தான தமிழ்மொழியைத் திட்டமிட்டு அழித்தும், தொல்குடியாம் தமிழ்குடிமக்களை ஏதிலிகளாக்கியும் வெறியாட்டம் போடும் இன்றைய இந்தி(ய) பன்னாட்டின அரசைப் போல பிரெஞ்சு வந்தேறி அரசும் அன்று தமிழ்மொழிக்கும் தமிழர் நாட்டின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றிற்கும் உரிய பங்களிப்புத் தராமல், பிரெஞ்சு வரலாற்றையும், பண்பாட்டையும் தமிழ் மாணவர்கள் மேல் திணித்தது. பிரெஞ்சு வல்லரசின் இந்தக் கல்விமுறையை எதிர்த்து 1927ல் கல்வேக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டதை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானது.

சுரேசு விக்டர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டூப்ளே ஆட்சிக்காலத்தில் (1742-1754) பெரிய நிலக்கிழாரும், 'ஆனந்தபுரவி' என்ற கப்பலைச் சொந்தமாகக் கொண்டு வாணிகம் செய்து வந்தவருமாகிய வந்தேறி வடுகன் ஆனந்தரங்கப் பிள்ளைக்கு அடிமைப்பட்டிருந்த 'ஆலங்குப்பம்' என்னும் சிற்றூர், வழுதாவூர் கிலோதார் மீர்ஆசாத்தினால் கைப்பற்றப்பட்டது. டூப்ளேக்கும் மீர்ஆசாத்துக்குமிடையே பகை இருந்ததால் 'பிள்ளை'யவர்கள் வலிமையான

*'ஆனந்தரங்கராட்சந்தமு' என்னும் நூலில் கத்தூரிரங்கக் கவியவர்கள் குறிப்பிட்டுள்ளபடி விசயநகரப் பேரரசை ஆண்ட யாதவகுலப் பெருவேந்தன் கிருஃஷ்னதேவராயரின் குடிவழிவந்த வந்தேறித் திராவிடத் தெலுங்கனே இந்த ஆனந்தரங்கப்பிள்ளை. வடுக வந்தேறி நாயக்கர்கள் தமிழர் நாட்டை ஆண்டபோது வடுகர்கள் அலையலையென வந்து தமிழகத்தின் சிறிய, பெரிய நகரங்களிலெல்லாம் காலூன்றினர்.*

டூப்ளேயின் தயவை நாடி 'திவான்' ஆனந்தரங்கப்பிள்ளையானார். 'ஆனந்தரங்கராட்சந்தமு' என்னும் நூலில் கத்தூரிரங்கக் கவியவர்கள் குறிப்பிட்டுள்ளபடி விசயநகரப் பேரரசை ஆண்ட யாதவகுலப் பெருவேந்தன் கிருஃஷ்னதேவராயரின் குடிவழிவந்த வந்தேறித் திராவிடத் தெலுங்கனே இந்த ஆனந்தரங்கப்பிள்ளை. வடுக வந்தேறி நாயக்கர்கள் தமிழர் நாட்டை ஆண்டபோது வடுகர்கள் அலையலையென வந்து தமிழகத்தின் சிறிய, பெரிய நகரங்களிலெல்லாம் காலூன்றினர். **தம் பெயருக்குப்பின் இருந்த தத்தம் தாய்ச்சாதிப் பெயர்களைத் தொலைத்துவிட்டு அவர்கள் பிள்ளை, முதலி என்ற தமிழ்ச்சாதிப் பெயர்களை இணைத்துக்கொண்டு மந்தைகளோடு மந்தைகளாக வாழத்தலைப்பட்டனர்.** தமிழர்களும் இவர்களைத் தம் சொந்த மக்கள் என எண்ணி மயங்கி தத்தம் தோட்டம் துரவுகளையும் வீடு வாசல்களையும் வஞ்சகத் தன்மையே உருவான இவர்களிடம் இழந்ததால் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் நாடோடிகளாகக் கெட்டலைந்து கொண்டிருக்கின்றனர்.

## மீண்டும் அடிமையாகவா போராடிப் பெற்றோம் விடுதலை ?

ஆங்கிலோ தமிழகத்தில் ஆங்கில வல்லரசுக்கு எதிராகத் தமிழ் மக்களிடையே உருவான எழுச்சியானது வ.உ.சி., சுந்தரலிங்கனார், புலித்தேவன் வரிசையில் பல தமிழ்ப் போராளிகளை உருவாக்கி விடுதலைக் களத்திற்குப் போராட்ட வடிவத்தைக் காட்டியதன் விளைவு ஆங்கில வந்தேறிகள் தாய்த் தமிழர் நாட்டை இந்தி(ய) பன்னாட்டின அரசுக்குள் அடக்கிவிட்டு மீண்டும் ஓர் அடிமைத் தமிழகமாக மாற்றிவிட்டு ஓடோடினர். போராடிப் பெற்ற விடுதலை இந்தி(ய) தேசிய மாயைக்குள் முடக்கப்பட்டமை கண்டு தன்மானத் தமிழ் போராளிகள் தமிழருக்கு என்று தனித்த இறையாண்மை கொண்ட தமிழ்த் தேசிய ஓர்மையில் அணியமாகி விடுதலைக் களம் அமைக்க வேண்டியதன் கால அகத்தியத்தை உணர்ந்திருக்கிறார்கள்.

ஆனால், பிரெஞ்சு தமிழகமான புதுவையை ஆண்ட பிரெஞ்சு வந்தேறிகள் தமக்கு அடிமைப்பட்டுக்கிடந்த தமிழக மக்களுக்கு விடுதலையைத் தங்கத்தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம் முதலியவற்றுடன் வைத்துக் கொடுத்துவிட்டுப் பெருந்தன்மையுடன் விலகிவிட்டதாக ஒரு மாயை புதுவை மக்களிடையே இருந்து வருகிறது.

1947-ஆம் ஆண்டானது, தமிழக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தாய்த் தமிழ்நாட்டை ஆங்கில மீப்பெரு வல்லரசின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஒரு முக்கியமான காலகட்டமேயாகும். ஆனால் அந்த விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழகத் தலைவர்களில் பலருக்கு இந்தி(ய) தோசையப் பேய் பிடித்திருந்ததால் அந்த மாயையில் சிக்குண்டு தமிழர் நாட்டின் இறையாண்மையைக் காட்டிக் கொடுத்த இரண்டகர்களாயினர். மேலும், ஆங்கிலோ - தமிழகப் பகுதிகளில் அரசியலில் மேலாதிக்கம் செலுத்தி வந்த தலைவர்களில் மிகப்

*புதுவைப் பொருளியலின் தலைவிதியை இறுதியாக்கும் மீப்பெரும் சக்திகளாக வீங்கிப் பெருத்துள்ள இவர்கள் தமிழ் முதலாளியரின் தொழில்முனைவுகளை முற்றிலுமாக முடமாக்கி விட்டனர். புதுவை முதலாளியர்களில் தெலுங்கர், மார்வாடி, குசராத்தி மற்றும் பிற வடவருமே மிகுந்து கோலோச்சி வருவது துயரமான உண்மை.*

பெரும்பான்மையோர் வந்தேறித் திராவிட அரசியலில் மூழ்கி நாறிய தெலுங்கர்களும், மலையாளிகளும், கன்னடர்களுமாகிய திராவிடர்களாகவே இருந்தது, தமிழ்த் தேசிய எழுச்சிக்குப் பேரிடராக இருந்தது.

www.tamilarangam.net

ஆங்கிலேயரிடம் அடிமையுண்டு கிடந்த தமிழகத்தில் ஆங்கிலேயரின் வல்லாதிக்கத்தி லிருந்து மீண்டு வர நடந்த போராட்டங்கள் போலவே பிரெஞ்சுத் தமிழகமான புதுவையிலும், காரைக்காலிலும் விடுதலைப் போராட்டங்கள் வெடித்தன. பிரெஞ்சுத் தமிழக ஆட்சியின் கீழ் 453 சதுரக்கட்டை (கிமீ) பரப்பளவுள்ள சிறிய தமிழ்ப் பகுதியே இருந்ததால் 1930 களிலிருந்து புதுவை விடுதலை பெறும் நாள் வரை பிரெஞ்சுத் தமிழக மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் தமிழ்க் குமுகத்தின் அனைத்துப் பிரிவினரும் நடத்திய எழுச்சி மிக்க மக்கட் போராட்டம் வந்தேறி அநாகரிகப் பிரெஞ்சு அரசாலும், இந்தி(ய) பன்னாட்டின அரசாலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டது. இந்தி(ய) அரசின் சூழ்ச்சியாலும், பிரெஞ்சுத் தமிழகத் தலைவர்களின் இந்திய தோசைய மயக்கத்தினாலும் புதுவையானது தமிழர்நாட்டைப் போல் இந்தி(ய) பன்னாட்டின அரசின் நயவஞ்சகப் பிடியில் சிக்குண்டது.

## மயானமாகி வரும் புதுவை மண்

கழக (சங்க)க் காலத்துக்கு முன்பிருந்து கி.பி. 16ம் நூற்றாண்டில் திராவிட வந்தேறிகளுக்குத் தமிழகம் அடிமைப்படும் காலம் வரை புதுவைத் தமிழர்கள் நெசவுத் தொழிலிலும், பருத்தி ஆடைத்தொழில் மற்றும் பல குடிசைத் தொழில்களிலும் சிறந்து விளங்கி வாழ்வாங்கு வாழ்ந்தனர். ஆனால், அதன்பின்பு திறந்த வீட்டில் புகும் நாய் போல நுழைந்த வந்தேறி முதலாளிகள் புதுவையில் குடியேறி நன்கு காலூன்றி அதனை வந்தேறிகளின் வேட்டைக்காடாக்கி விட்டனர். இன்று புதுவைப் பொருளியலின் தலைவிதியை இறுதியாக்கும் மீப்பெரும் சக்திகளாக வீங்கிப் பெருத்துள்ள இவர்கள் தமிழ் முதலாளியரின் தொழில்முனைவுகளை முற்றிலுமாக முடமாக்கி விட்டனர். புதுவை முதலாளியர்களில் தெலுங்கர், மார்வாடி, குசராத்தி மற்றும் பிற வடவருமே மிகுந்து கோலோச்சி வருவது துயரமான உண்மை.

### புதுவை மாநிலத்தில் இயங்கும் தொழிலகங்கள் :

| வகை | புதுச்சேரி | காரைக்கால் | மாகி | ஏனாம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சிறிய தொழிலகங்கள் | 4388 | 726 | 198 | 180 | 5492 |
| நடுத்தர தொழிலகங்கள் | 78 | 4 | - | 6 | 88 |
| பெரிய தொழிலகங்கள் | 19 | 3 | 1 | 2 | 25 |
| மொத்தம் | 4485 | 733 | 199 | 188 | 5605 |

453 சதுர கட்டை பரப்பளவே கொண்ட புதுவை மற்றும் காரைக்காலில் இருக்கும் தொழிலகங்களின் எண்ணிக்கை மலைக்கச் செய்யும். சிறியதும், பெரியதுமாக மொத்தம் 5218 தொழிலகங்களை இவை கொண்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ள பெரிய தொழிலகங்கள் (Large Scale Industries) அனைத்துமே இந்தி(ய) பன்னாட்டின தோசைய முதலாளிகள் மற்றும் திராவிட வந்தேறிகள் வயம் உள்ளன. சேதாரப்பட்டு, மேட்டுப்பாளையம், தட்டாஞ்சாவடி, காட்டுப்பாளையம் என்று நான்கு தொழிற்பேட்டைகள் புதுவையைப் பற்றியுள்ளன.

கடற்கரைச் சாலையில் உள்ள எரிசாராய ஆலை நாளும் மூன்று இலக்கம் நிலத்தடி நீரையும் காகிதத்தாள் தொழிலகம் நாளொன்றுக்கு 37.5 இலக்கம் நீரையும் உறிஞ்சுவதால் நிலத்தடியில் கடல்நீர் புகுந்து நிலத்தடி நன்னீர் உப்பு நீராகிவிட்டது. 'புதுவையின் குடிநீர் அபாயம்' புதுவைக்கு இன்று பெரும் அறைகூவலாக உள்ளது. இந்தி(ய) துணைக் கண்டத்தில் வேறெங்கும் இல்லாத எண்ணிக்கையாக புதுவையில் அதிக அளவாக 1318 இயைபியற் (Chemical) பொருள் தொழிலகங்கள் உள்ளன. தொழிலக கழிவுகள் வறண்ட குளங்களிலும், வெட்ட வெளியிலும் ஆண்டுக் கணக்கில் கொட்டி வைக்கப்படுவதால் அவை நிலத்தில் ஊறி நிலத்தடி நீரை பாழ்படுத்தி விட்டன. புதுவைக்குத் தண்ணீர் தரும் இடமான முத்தரையர்பாளையத்து நிலத்தடி நீர் நஞ்சாக மாறிவருகிறது. பாகூர், பிள்ளையார் குப்பம், சேதாரப்பட்டு, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நீரானது கந்தகம், ப்ளோரைடு, இரும்பு கலந்த பல வண்ணங்களில் கிடைக்கின்றது. எனவே, வந்தேறிகளின் தொழிலகங்கள் வெளியேற்றும் கழிவுகளால் புதுவைக்குத் தரமான குடிநீர் கிடைப்பது அரிதாகி வருகின்றது. தொழிலக கழிவாக வரும் நீரைத் தூய்மையாக்க ஒரு நாளைக்கு உருவா 4000/- ஆகிறது என்பது கணக்கு. ஆனால், வந்தேறிப் பணமுதலைகள் நீரைத் தூய்மையாக்காமல் கையூட்டுக் கொடுத்து வருவது அன்றாடம் நடைபெறும் செயலாகி விட்டது.

புதுவையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகின்றது என்றும், கிழக்குக் கடற்க்கரைச் சாலைக்கு இணையாக நில வெடிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அறிவியல் ஆய்வுகள் எச்சரித்தாலும், தமிழருக்கும், தமிழ் மண்ணுக்கும் அயலாரான வந்தேறிகள், விளைச்சலுக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேடான கழிவு நீரைப் புதுவை மண்ணிலும் கடலிலும் கொட்டிப் புதுவையின் ஒட்டு மொத்த சூழலையே நச்சுப்படுத்தி வருகின்றனர்.

ஆந்திரத்திலும், கருநாடகத்திலும், கேரளத்திலும் உள்ள நடுவணரசுத் தொழிலகங்களிலும் ஆலைகளிலும் அவரவர் மாநிலத்தவரும் மொழிகளுமே கோலோச்சி வரும் இந்நேரத்தில் வேலைவாய்ப்பு என நோக்குகையில், அனைத்து மட்டத்திலும்

---

***பிரெஞ்சு அநாகரிகர்களின் பிடியிலிருந்து மீண்டு புதுவை மண்ணில் கருக்கொண்ட தமிழரின் தொழில்முனைப்பைக் குலைத்தது திராவிடர்களுக்கும் மார்வாடிகளுக்கும் இடையே ஏற்பட்ட கள்ள உறவேயாகும். விளைவு : புதுவைத் தமிழ்மண் இன்று உலகளாவியதொரு விற்பனைப் பண்டமாகக் கழக ஆட்சியில் காட்சி அளிக்கின்றது.***

---

தமிழரைப் பார்ப்பதும் தமிழைக் கேட்பதும் புதுவையில் அத்திப்பூத்தாற்போல் அரிதினுமரிதாக உள்ளது. தவறித் தடுக்கி விழுந்தால், மலையாளியின் தேநீர்க் கடைகளிலும், வழக்கினால் மார்வாடியின் வட்டிக்கடைகளிலுமே விழவேண்டிய அவலம் ! உணவுப் பொருள் ஆக்கத்தொழில், மருந்துத் தொழில், தாள்தொழில், இழுவைத் தொழில், வேளாண் மற்றும் மின்கருவி ஆக்கத்தொழில், ஆலைத்துணி வணிகம், கணிப்பி நிறுவனங்கள், இயைபியற்பொருள் (Chemical) ஆக்கம் ஆகிய அனைத்திலும் இன்று மார்வாடிகள், குசராத்திகள், பார்சிகள் போன்ற வடவரே மேலாண்மை பெற்று விளங்குகின்றனர். மண்ணின் மைந்தரான தமிழர்களோ அடிமைக்கூலிகளாக அல்லலுறு கின்றனர். **மார்வாடி போன்ற வடக்கத்திய வந்தேறி முதலீடுகள் இந்த அளவுக்கு மேலாண்மை பெற வழி வகுத்தது வடுக வந்தேறிகளான திராவிடரே ஆவர்.** பிரெஞ்சு அநாகரிகர்களின் பிடியிலிருந்து மீண்டு புதுவை மண்ணில் கருக்கொண்ட தமிழரின் தொழில்முனைப்பைக் குலைத்தது திராவிடர் களுக்கும் மார்வாடிகளுக்கும் இடையே ஏற்பட்ட கள்ள உறவேயாகும். விளைவு : புதுவைத் தமிழ்மண் இன்று உலகளாவியதொரு விற்பனைப் பண்டமாகக் கழக ஆட்சியில் காட்சி அளிக்கின்றது.

தரகு முதலாளிகளாயும், இந்தி(ய) இந்துத்துவப் பாசறையின் அடிவருடிகளாயும் உள்ள **டாடா, தாப்பர், ஸ்பிக், கோத்தாரி சிறிராம், எல் அண் டி, செம்ஃபேப், ஒன்ஸ்-பில்ட், இந்துசுத்தான் லீவர்** போன்ற இன்னும் பல பன்னாட்டுத் தரகு முதலை நிறுவனங்களால் புதுவை மண் கற்பழிக்கப்பட்டுக் களையிழந்து வருகின்றது. தமிழினம் முழுவதும் யாதொரு தொழில்முனைவும் இல்லாத இனமாக ஆக்கப்பட்டுள்ளது. புதுவை மண்ணுக்குக் கேடு விளைவிக்கும் தொழிலகங்களை இந்தி(ய) தோசைய முதலாளிகளும், திராவிடர்களும் புதுவையில் நிறுவி தமிழ்மண்ணைப் பாலைவனமாக்கி வெறியாட்டம் போடுகின்றனர்.

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில்லறை வணிகத்தில் மட்டுமே முதலீடு செய்யும் வாய்ப்பிருந்த தமிழர்கள், அதை மெல்ல மலையாளிகள் போன்ற வந்தேறிகளிடம் இழந்து வருவது வேதனையிலும் வேதனை. தமிழ் முதலாளியரில் பலர் இன்று மார்வாடிகளிடமும், தெலுங்கர்களிடமும் பெரிய கொத்தடிமைகளாகி வருகின்றனர். வங்கிக் கடன் பெறுவதிலும், தொழில் உரிமம் பெறுவதிலும், ஏற்றுமதி-இறக்குமதி உரிமங்களைப் பெறுவதிலும் மண்ணின் மைந்தர்களான தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டு அவர்கள் எதையும் பெற இயலாது முடங்கிக் கிடக்கின்றனர்.

ஆண்டை அரசை எதிர்பார்க்காத தற்சார்புத் தன்மையுடன், தமிழரின ஓர்மையையும் தமிழ்த் தேசிய விடுதலை வேட்கையையும் உளத்தியலாகக் கொண்ட தமிழ் முதலாளிகள் உருவாக்கும் தமிழ் முதலாளியமே புதுவைப் பொருளியலை

---

***ஆண்டை அரசை எதிர்பார்க்காத தற்சார்புத் தன்மையுடன், தமிழரின ஓர்மையையும் தமிழ்த் தேசிய விடுதலை வேட்கையையும் உளத்தியலாகக் கொண்ட தமிழ் முதலாளிகள் உருவாக்கும் தமிழ் முதலாளியமே புதுவைப் பொருளியலை மண்ணின் மைந்தனுக்கு மீட்டுத்தர முடியும். தமிழ்த் தேசிய உளத்தியலில் பிறழ்ந்தால், தமிழ் முதலாளியம் மீண்டும் தலையெடுக்க முடியாது.***

---

மண்ணின் மைந்தனுக்கு மீட்டுத்தர முடியும். தமிழ்த் தேசிய உளத்தியலில் பிறழ்ந்தால், தமிழ் முதலாளியம் மீண்டும் தலையெடுக்க முடியாது.

**தொடரும் . . .**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்படிச் செப்படா ஞொப்பன் கொரவளை!




மந்திரி வேலைக்குப் போனாலும்கூட 'மாமா' வேலையைக் கைவிடக் கூடாது என்னும் 'கொள்கைப்' பிடிப்பினால், முதல்வர் குடும்பத்துக்குப் படுக்கை தட்டிப் போட்டுப் பணிவிடைகள் செய்வதில் மட்டுமே கண்ணும் கருத்துமாய் இருந்துவந்த வீராசாமி நாயுடுகளுக்கு இப்போது முதல்வர் நாற்காலி மீதும் கண் விழுந்துவிட்டது! அந்த் ஆசையைத்தான் "நாயுடுகளுக்காக நாயுடுகளால் நடத்தப்படும்" நாயுடு பேரவையின் தலைவனான காமாட்சி நாயக்கர் வேறு வகையில் வெளிப்படுத்தியிருக்கிறார்!

தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சராக நாயுடு ஒருவரையே அமர்த்தும் அளவுக்குத் தமிழ்நாட்டு நாயுடு பேரவை கிடுகிடுவென வளர்ந்துவிட்டதாம்! அதனால், நாயுடு பேரவை "திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழக"மாகப் பெயர்மாற்றம் பெறவிருக்கிறதாம்! 3.1.1999 இதயம் பேசுகிறது ஏட்டில் காமாட்சி நாய்க்கரின் இதயம் பேசியிருக்கிறது!

"ஆசை வெட்கமறியாது" என்பார்கள். காமாட்சி நாய்க்கரின் ஆசையோ ஆசையிலும் கடைகெட்ட பேராசையாகும். திராவிட மாயைகளிலிருந்து படிப் படியாக விடுபட்டுத் தெளிவு பெற்றுக்கொண்டிருக்கும் தமிழர்களின் இனவுணர்வுகள் சினஉணர்வுகளாகி வடுக வந்தேறிகளின் பேராசைகளைச் சுட்டெரித்து வீணாசைகளாக்கப் போவது புரியாமலேயே பதவி நசையும் நாற்காலிப் பித்தமும் தலைக்கேறிப் பிதற்றிக் கொண்டிருக்கிறார் காமாட்சி நாயக்கர்.

அந்தக் காலத்தில் தமிழர்கள் சிலருக்கு ஏற்பட்டுத் தொலைத்த பங்காளிக் காய்ச்சலால் வந்தேறி வடுகர்களுக்குப் பல்லக்குத் தூக்கினார்கள் என்பதால், திருமலை நாயக்கன் காலத்துக் கனவுகளிலேயே மிதந்து கொண்டிருக்கிறார் காமாட்சி நாயக்கர். ஆனால், காட்டுக்குள்ளே திரிந்துகொண்டிருந்தாலும், நாட்டுப்பற்றுடன் சிந்தித்துத் தமிழன் யார், வடுகன் யார் என இனம்பிரித்து உதைக்கும் சந்தன வீரப்பன் காலம் இது என்பது அவருக்கு ஏனோ மறந்து போய்விட்டது.

காமாட்சி நாயக்கரின் கற்பனைக் கழுகு, தமிழக முதல்வர் பதவியைச் சுற்றிச்சுற்றி எப்படியெப்படி வட்டமிடுகிறது பாருங்கள்!

"பலிசா நாயுடு, கம்மா நாயுடு, ஈடிகா நாயுடு, தொட்டிய நாயக்கர், வேளமா நாயுடு உள்ளிட்ட 18 நாயுடு பிரிவினரும் தமிழர்நாட்டில் ஒரு கோடிக்கு அதிகம். அதுவும் போதாதென்று தெலுங்குப் பிராமணர், தெலுங்குச் செட்டியார், 24 மனைச் செட்டியார், கோமுட்டிச் செட்டியார், அருந்ததியர் (ஆதிஆந்திரர்), தெலுங்கு ரெட்டியர் போன்றோரையும் திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகத்தில் இணைத்துவிட்டால், தமிழகத்தில் அடுத்த ஆட்சியைத் தெலுங்கு பேசும் இனமக்களே அமைப்பது உறுதி!" (இதயம் பேசுகிறது 3.1.1999)

அடி செருப்பாலே!

சந்தைக்குச் சந்தை 'தாலி'களை அறுத்து அறுத்துக் கட்டிக்கொண்டும், தோப்புக்குத் தோப்பு 'மச்சான்' களை மாற்றி மாற்றிக் கூட்டிக்கொண்டும் திரியும் குச்சுக்காரிகளின் குலக்கொடிகள் படர்ந்து படர்ந்து, கொழுகொம்புகள் நீண்டு நீண்டு இப்போது "திருமலை நாயக்கனின் பரம்பரை" ஒரு கோடியைத் தாண்டு தாண்டென்று தாண்டி விட்டிருக்கிறது போலும்!

நாயுடுகள் மட்டுமே ஒரு கோடி என்றால், ஏனைய ரெட்டி, செட்டி, கோமுட்டி, தோட்டி, சக்கிலி, பார்ப்பான்களையும் சேர்த்துக் கூட்டினால், தமிழர் நாட்டில் தெலுங்கர்கள் மட்டுமே நாலு கோடியை எட்டிப்பிடித்து, அடுத்த தேர்தலுக்குள் ஆறு கோடியையும் தொட்டு முடித்துவிடுவார்கள் போலிருக்கிறதே?!

அதற்குப் பிறகு, எதற்காகத் தேர்தல், புடலங்காய், கொத்துமல்லி, பச்சை மிளகாய், கோங்குராக் கீரை எல்லாம்? பேசாமல், தமிழர்நாட்டையும் சந்திரபாபு நாயுடுவின் நேரடிப் பொறுப்புக்குக் கொண்டுபோய்விடலாமே?

இப்படித் தெலுங்கு வந்தேறிகளின் எண்ணிக்கையைத் தேவைக்கும் மேலே நீட்டிக் காட்டி, நாலுகால் குக்கல் நாக்கை நீட்டுவது போன்று, தமிழக முதல்வர் நாற்காலியை நோக்கி நாக்கை நீட்டிச் சப்புக்கொட்டிக் கொண்டிருக்கும் காமாட்சி நாய்க்கருக்குப் பழைய நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவு படுத்துகிறோம்:

கீழவெண்மணியிலே இந்த மண்ணின் சொந்த மைந்தர்களான 44 தொல்தமிழர்களை உயிருடன் கொளுத்திய வந்தேறி நாயுடுவால், அதன் பிறகு எத்தனை ஆண்டுகள் உயிருடன் வலம்வர முடிந்தது?

உலகத்தின் நான்காவது பெரிய படையாளிகள் என்னும் திமிரோடு தமிழ்ஈழநாட்டுக்குள் (அமைதி போக்கப்) புகுந்த இரண்டரை இலக்கம் பீடைகளும் சில நூறு புலிகளிடம் அடிபட்டு உதைபட்டு மிதிபட்டுத் துவைபட்டுத் தறிகெட்டு மிரண்டு, திக்குமுக்காடித் திணறித் துண்டைக் காணோம் துணியைக் காணோம் தலையைக் காணோம் முண்டத்தைக் காணோம் என்று நாயோட்டம் பேயோட்டமாக ஓடோடி வந்ததையும், அந்தப் படையெடுப்பைத் தடபுடலாய் நடத்திய இத்தாலிக் கொத்தடிமை தமிழர்மண்ணிலேயே குண்டியிலே துணியின்றி மூஞ்சியிலே சதையின்றிக் குப்புற்று விழுந்து செத்து நாறித் தொலைந்ததையும், திருமலை நாயக்கன் என்னும் திருட்டு வடுகன் காலத்துக் கனவுகளிலேயே மிதந்து கொண்டிருக்கும் காமாட்சி நாய்க்கர்களும், அவர்களைவிட்டு ஆழம்பார்க்கும் ஆர்க்காட்டு நாயுடுகளும் எண்ணிப் பார்ப்பது அவர்களுக்குத்தான் நல்லது; மிக மிக நல்லது.

தெலுங்கு வந்தேறியான திருமலை நாயக்கன் கும்பலின் திமிராட்டங்களுக்குத் துணைபோன தளவாய் அரியநாயக முதலிகளின் காலமோ, கொள்ளைக்காரன் கெட்டிபொம்முவின் கொற்றங்களுக்குக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றேவல் புரிந்த **தானாபதிப் பிள்ளைகளின்** காலமோ அல்ல இது. இளிச்சவாய்த் தமிழர்களைப் புளிச்சவாய்த் தெலுங்கர்கள் பயன்படுத்திக் கொண்ட அந்தக் காலம் மலையேறித் **திராவிட மாயைகள்** கலையத் தொடங்கியுள்ள காலம் இது. "தமிழனை அடிப்பியாடா, கன்னட நாயே?" என்று தன்னால் சுட்டுத்தள்ளப்பட்ட சீனிவாசுவின் தலையை எட்டி எட்டி உதைக்கிற **வீரப்பப் படையாச்சிகளின்** காலம் இது! புரிகிறதா காமாட்சி நாயக்கரே?

தெலுங்கு வந்தேறிகளான உங்களுக்கு இப்போது தமிழர்நாட்டில் வாய்த்திருக்கும் வாழ்வே, வரம்புக்கு மீறிய வளவாழ்வு தான். ஏற்கெனவே "திராவிட" இயக்கங்களின் தில்லுமல்லுத்தனங்கள்மூலம் தமிழர் நாட்டைக் கட்டியாளும் பொட்டுக் கட்டித் தட்டு வாணிக் கும்பலின் ஒதுக்கீட்டுச் சலுகைகளால் அதிகமாகக் குளிர்காய்ந்து கொழுத்துப் போயிருப்பது வந்தேறித் திராவிடர்களே தவிர, இந்த மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் அல்லர்.

இதற்கும் மேலேயும் பேராசைப்பட்டுத் தமிழர்களின் தோள்களிலே ஏறிக் குந்திக்கொண்டு, தலைகளிலே மிளகாய் அரைத்துக் கோங்குராத் துவையலைச் சுவைக்க வேண்டும் என்று நாக்கைச் சொட்டாங்கி போட்டுக்கொண்டு திரிந்தால், வடுகர்களின் வால்களை ஒட்ட நறுக்கி, நறுக்கிய இடங்களிலே தூத்துக்குடி உப்பையும், சிவகங்கைச் சுண்ணாம்பையும் கலந்து கலந்து வறட்டி தட்டி விரட்டியோட்டத் தமிழர்கள் தயங்க மாட்டார்கள்.

தன்மான உணர்வுள்ள தமிழர்களுக்கும் ஓர் எச்சரிக்கை!

**திராவிட மாயைகளிலிருந்து** விடுபட்டுத் தமிழர்களிடம் **தமிழ்த் தேசிய உணர்வுகள்** கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் நேரத்தில், வந்தேறி நாயுடுகளுக்குத் தமிழக முதலமைச்சர் பதவிமீது நைப்பாசை வந்திருக்கிறது.

குப்பைத்தொட்டிகளுக்குப் பின்னால் ஊளையிட்டுக் கொண்டிருக்க வேண்டிய சொறி நாய்கள், நடுவீடுகளுக்குள் வந்து நாக்கை நீட்டுவது கண்டிப்பாக உதைபட்டுச் சாகத்தான் என்கிற உண்மையை ஏற்கெனவே **எல்லாக் கட்சிகளிலுமே** நுழைந்து நுழைந்து வெளிவந்துவிட்டதாக வாய்ச்சவடாலடிக்கும் "காமாட்சி நாய்"க்கர்களுக்கு உடனடியாக உணர்த்திவிடுவதுதான் சரி.

பொட்டி சீராமுலுவின் பட்டினிப் போரைக் காரணமாக்கி ஏற்கெனவே தமிழர்களிடமிருந்து வடவேங்கடம் முழுவதையுமே தட்டிக்கொண்டு போய்விட்ட தெலுங்கர்கள், இப்போது எஞ்சியுள்ள தமிழர் நாட்டையும் தட்டிப்பறிக்கத் திட்டமிடுகிறார்கள்.

சென்னை மாகாணத்துக்குத் **தமிழ்நாடு** என்று பெயர் சூட்ட வேண்டும் என்பதற்காகப் பட்டினிப் போர் நடத்திய **சங்கரலிங்க(நாடா)ரின்** அருமையையும், திருப்பதியையும் திருத்தணியையும் மீட்க வடவெல்லை மீட்புப் போராட்டம் நடத்திய **மங்கலங்கிழாரின்** பெருமையையும் தமிழரினம் உணராமலேயே போய்விட்டது.

காரணம், **திராவிட மாயை!**

"சென்னை மாநிலத்திற்குத் **தமிழ்நாடு** என்று பெயர் சூட்டக் கூடாது; ஏனென்றால், இம் மாநிலத்தில் தெலுங்கர்களும் வாழ்கிறோம்" என்று எதிர்ப்புக் குரல் எழுப்பிய **இராமசாமி நாயுடுகளை** அப்போதே தூக்கிப்போட்டு மிதித்து, குரல்வளையை நெரித்து, ஈரல்குலையை அறுத்துத் **தமிழர் உரிமையை** நிலைநிறுத்திக் காட்டியிருந்தால், இப்போது காமாட்சி நாய்க்கர்களின் பேச்சிலே இத்தனை தெனாவட்டும் நாக்கிலே இத்தனை திண்ணக்கமும் வந்திருக்குமா? "திராவிட இயக்கங்களை" வளர்த்துத் தமிழ்த் தேசிய உணர்ச்சிகளை மழுங்கடித்துக் கொண்டுவிட்ட தமிழர்கள் சிந்திக்கட்டும்!

எப்படியோ? தமிழ்நாட்டிலே ஓர் இனப்போருக்கு விதை தூவிவிட்டார் காமாட்சி நாயக்கர். நாம் இனப்போர் என்று சொல்வது முதலாளி–தொழிலாளிகளுக்கு இடையிலான அகவ(வர்க்க)ப் போராட்டத்தையன்று.

கொள்ளைக்காரன் கெட்டிபொம்முவின் பிறங்கடைகளான தெலுங்கர்களுக்கும், மானங்காத்த **வீர மருதுவின்** பிறங்கடைகளான தமிழர்களுக்குமிடையிலான மொழிவழித் தேசிய இனவுரிமைப் போரையே இனப்போர் என்று குறிப்பிடுகிறோம்.

தமிழர்நாட்டிலுள்ள தெலுங்கர்களையெல்லாம் தமிழர்களிடம் உதைபட வைப்பது என்று காமாட்சி நாய்க்கர் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டார். அதைத்தான் அவருடைய 'இதயம்' பேசியிருக்கிறது.

தமிழர்நாட்டின் முதலமைச்சர் பதவிக் குத்தகை உரிமை அடுத்தடுத்துத் தெலுங்கர்களுக்குத்தான் என்று வந்தேறி நாயுடுகள் 'லோ, லோ' என்று அலையும் போது, பாராண்ட பரம்பரையினரான தமிழர்கள் மட்டும் (பலிசா) நாயுடு 'மாமா'க்களிடமிருந்து வளையல்களை வாங்கி அணிந்துகொண்டு, (கம்பளத்து) நாய்க்கர்களிடமிருந்து துப்பட்டிகளை வாங்கி முக்காடு போட்டுக்கொண்டு மூலை வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்துவிட முடியுமா?

காமாட்சி நாய்க்கரே!

உங்களின் கணக்குப்(புளுகுப்)படியே, வந்தேறி வடுகர்களான நீங்கள் கோடிக்கணக்கிலே வாழ்ந்தாலும் **இந்த நாடு தமிழர்நாடா இல்லையா?**

> **"பள்ளர் பறையர் படையாச்சி யார், கவுண்டர் .**
> **கள்ளர் மறவர் கனத்த அகம்படையார்**
> **வெள்ளாளர் பிள்ளைமார் கோனார்கள் முத்தரையர்**
> **வள்ளுவர்கள் கைக்கோலர் நாட்டார் நகரத்தார்..."**

போன்ற பச்சைத் தமிழர்கள் சில ஆயிரம் பேர் கூடவா தேற மாட்டார்கள்? இந்த மண்ணை ஆள வும், இந்த மண்ணில் வாழவும் தமிழர்களுக்கு இல் லாத உரிமையா உங்களைப் போன்ற வடுக வந் தேறிகளுக்கு வந்துவிட்டது?

இராவுத்தரே கொக்காய்ப் பறக்கும்போது, நொள்ளைக் குதிரை கொள்ளு கொள்ளு என்று லொல்லுத்தனம் செய்வது போன்று, இந்த மண்ணின் சொந்த மைந்தர்களே தில்லிக்காரனிடம் "திருவோட்டு அரசியல்" நடத்தும்போது, அண்டிப் பிழைக்க வேண்டிய வந்தேறி முண்டங்களான உங்களுக்கு **முதலமைச்சர் பதவிதான்** வேண்டுமோ? "தோத்தோ" என்றவுடன் மூஞ்சியை நக்குகிற நாய்களைப் போல், ஒரேயடியாக **உரிமை** எடுத்துக் கொண்டால் எப்படி?

தமிழர்நாடு அந்த அளவுக்கா கண்டகண்ட நாய்களுக்கும் திறந்த வீடாய்த் தெரிகிறது? வந்தாரை மட்டுமே வாழவைக்கும் தமிழர்நாட்டில் தமிழர்களுடன் ஒட்டுறவோடும் நட்புறவோடும் வாழ முடிந்தால் அடக்கவொடுக்க மாக வாழுங்கள்! முடியாவிட்டால், திருடனான திருமலை நாயக்கனின் மகாலையும், மங்கம்மா சத்திரத்தையும் இடித்து, மண்ணையும் கல்லையும் வாரி வாரி மடிகளை நிரப்பிக்கொண்டு, எந்த எந்தக் கணவாய்களின் வழியாக இந்த மண்ணுக்கு வந்து சேர்ந்தீர்களோ, அந்த அந்தக் கணவாய்களின் வழியாகவே வட வேங்கடத்துக்கும் அப்பால் ஓடுங்கள்!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
காண்க பக். 20

www.tamilarangam.net

# சாலையார் காட்டிய வாழ்வுரிமை

குணா

**வாழ்வுரிமைக்கு முன்னோடி**

தமிழர்க்குத் தம் சொந்த மண்ணில் வாழ உரிமை உண்டு என்னும் வாழ்வுரிமை முழக்கத்தை முதன் முதலில் எழுப்பியவரே சாலையார்தான். வாழ் வுரிமை கேட்டு ஓர் இனத்தைத் தட்டியெழுப்பப் பார்த்த அந்தப் பாங்கு, இத் துணைக்கண்டத்திற்குப் புதிதுதான். சாலையார் எழுப்பிய **தமிழரின வாழ் வுரிமை முழக்கம்**, 10–12.9.1992 சென்னையில் பாட் டாளி மக்கள் கட்சி நடத்திய **தமிழர் வாழ்வுரிமை** மாநாட்டுக்கு வழிகோலியது. அடுத்து, 13.12.1998 அன்று கருநாட்கத் தமிழர் இயக்கம் கூட்டிய **கருநா டகத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுக்கும்**கூட அது வழிகாட்டியானது.

சாலையாரின் அறிவியக்கப் பேரவை 22.5.1988 அன்று நடாத்திய **தமிழ்த் தேசிய இனத்தின் வாழ் வுரிமை மாநாடு**, தமிழரின் தேசிய ஓர்மையை மடைதிருப்பித் திசைமயக்கிக் கெடுத்த 'திராவிடக்' கருத்தியலில் பெரிதாய்ச் சிக்கித் தறிகெட்டுத் தடு மாறவில்லை. "இந்தியா ஒரு நாடே அன்று; இந்தியத் தேசியஇனம் என ஒரு தேசிய இனம் இல்லை; இந்தியத் தேசியம் என்ற பேச்சும் பொய்யே!" என் னும் தொடக்கப் பாடத்தையே அம் மாநாடு படித்தது.

> "... இந்தியா என்று ஒரு நாடும், அதன் வழி இந்தியத் தேசியம் என்று ஒரு தேசியமும் இருப் பதாக நாம் நினைத்துக்கொண்டும், பேசிக்கொண் டும் இருப்பது நமது அறியாமையைக் காட்டு கிறது; அல்லது வேண்டுமென்றே சில வல் லாண்மைக்காரர்கள் இந்தப் பொய்ம்மையை நம்மீது திணித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. பொய்க்கருப்பும் போன்ற இந்த மாயையில் இருந்து இந்தியா வில் உள்ள பல தேசிய இனமக்களும் விடுபட வேண்டிய பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது!"

என்ற விளக்கம் அதன் முன்னுரையானது. தேசிய இன உரிமை ஒழிப்பு நிறுவனமே இந்தி(ய) அரசு என்னும் பாடம் அதில் மிகத் தெளிவாக இருந்தது.

**ஆளவந்தாரின் புல்லறிவாண்மை**

தமிழர்நாட்டில் ஒரு தமிழரின ஆட்சி நடைபெற வில்லை என்பது சாலையாரின் அடுத்த பாடம்.

> "தமிழாட்சி இல்லாத தமிழகத்தின் இன்றைய நிலையை எண்ணிப் பாருங்கள்! அரசிய லிலோ பிற துறைகளிலோ மேலோங்கியவர் கள், தங்களுக்குத் தாங்களே, அல்லது தங் களைச் சுற்றியிருப்பவர்களைக் கொண்டு, தங் களுக்கு அறிஞர், கலைஞர், டாக்டர், நாவலர், பேராசிரியர், அந்தச் செல்வர், இந்தச் செல்வர் என்றெல்லாம் பட்டங்கள் சூட்டிக் கொள்கிறார் கள். அதன் பிறகு, பெரும் படிப்பாளிகளே அணுகத் தயங்கும் சங்க இலக்கியத்தைப் பற் றியோ குறளைப் பற்றியோ தங்களுக்குத் தோன் றியவாறெல்லாம் விளக்கங்கள் சொல்லத் தொடங்கிவிடுகிறார்கள்! சடுத்தமாக இருந்தால், மற்றவர்களின் கருத்துகளைத் திருடி எழுதிக் கொள்கிறார்கள்! ('இஃது இன்னார் சொன்னது' என்று ஒப்புக்கொண்டு உரைக்கும் நாகரிகத் தைக்கூடக் காற்றிலே பறக்கவிட்டுவிடுகிறார் கள்!)"

என மனம் வெந்து நொந்து தமிழர்நாட்டை ஆள வந்தாரின் புன்மையைக் காட்டி, அவர்களது ஆட்சி **தமிழாட்சி அன்று** எனப் படித்துப் படித்துச் சொன் னவர் சாலையார்.

தமிழர்நாட்டுப் பொருளியலும்கூட, கொத்தாக வந்தேறி வல்லூறுகளின் கொடும்பிடிக்குள் சிக் குண்டு கிடப்பதைக் கண்டு கொதித்து நின்றவர் சாலையார். தமிழகத்தின் பொருளியல் தமிழர் கையில்தான் இருக்க வேண்டும் என்பது அவரது இயல்பான முடிபு. 'சென்னை எமதே!' என அடா வடிக் கூச்சலிட்ட தெலுங்கு வந்தேறிகளிடமிருந்து மீட்கப்பட்ட அத் தமிழர்நாட்டுத் தலைநகரம், இன்று அந்த வந்தேறிகளிடமே முழுமையாகச் சிக்குண்டு கிடக்கும் அவலத்தையும் கோடிட்டுக் காட்டியவர் அவர். வந்தேறிகள் தமிழர்நாடெங்கும் செந்நாய் களாய்த் திரிந்து அதன் இயற்கை வளங்களையெல் லாம் அள்ளிக்கொண்டும் கொள்ளைகொண்டும் போவதை எதிர்த்துக் குரலெழுப்பினால் — கூலி களாகவும் கொத்தடிமைகளாகவும் உலகெங்கும் பரவிய தமிழர்கள் கடல்கடந்து ஆங்காங்கே அடி உதைபடுவதைச் சுட்டிக்காட்டினால் — செங்கொடி தூக்கித் திரியும் ஐந்தாம்படைகளும் இந்தி(ய)த் தேசியச் சாய்க்கடைகளும் போடும் காட்டுக்கூச் சலைக் கண்டு வெறுப்புடன் சுட்டிக்காட்டிய சாலை யார், மார்வாடிகளைப் போன்ற வந்தேறிகளைத் தமிழர்நாட்டில் வளமுடனும் திருவுடனும் நோகா மல் நல்ல பாதுகாப்புடன் வாழும் வகையில் அவர் களைப் புரந்துவரும் 'முற்போக்கு' அலங்கோலத் தைப் படம்பிடித்துக் காட்டினார்.

> "அவர்களிடம் [மார்வாடிகளைப் போன்ற வந் தேறிகளிடம்] யாராவது ஒருவர் கொஞ்சம் சத்த மாகப் பேசினாலே, தமிழர்களிடையே உள்ள 'தேசியச் சாய்க்கடைகள்' கொதிக்கத் தொடங்கி விடுகின்றனவே!"

என்று சொல்லி அக் கயவர்களின் உண்மை உரு வத்தை வெளிக்காட்டியவர் சாலையார்.

தேசிய எ(ஒ)ருமைப்பாடு என்னும் போலி முழக் கம், வந்தேறிகள் தமிழர்நாட்டையும் மக்களையும் சுரண்டுவதை மூடிமறைக்கும் சூழ்ச்சியே எனக் கோடிட்டுக் காட்டியவர் அவர்.

**தமிழர்நாடா? திறந்த வீடா?**

தமிழகத்தைப் பால்கனியமயமாக்கும் (Balkanising) முயற்சியை எதிர்த்துக் குரலெழுப்பிய முன் னோடி அச் சாலையார். 'சிறுபான்மை மொழி யர்க்குப் பாதுகாப்பு' என்னும் சாக்கில், தமிழகத் தின் பல பகுதிகளில் கன்னடத்தையும் தெலுங்கை யும் மலையாளத்தையும் உருதுவையும் துணைஆட்சி மொழிகளாகச் செய்து 29.12.1993இல் கன்னடச்சி யான செயலலிதா ஆணை பிறப்பித்த அழிம்புச் செயல், தமிழகத்தை வந்தேறிகள் மேன்மேலும் பிய்த்துக் கொண்டும் பிடுங்கிக் கொண்டும் போவ தற்கு வழிவகுத்த வடுகச் சூழ்ச்சி என்பதைக் குறிப் பறிந்து கொண்ட சாலையார், தமிழர்நாட்டை

www.tamilarangam.net

வருங்காலத் தமிழ்த் தலைமுறையினர் வரலாற்றுப் பாடத்தில் படிக்க வேண்டுமாயின், அவ் வாழ்வுரிமை முழக்கம் தமிழரின் வாழ்வுரிமைப் போராகக் காலத்தால் கனிய வேண்டும். இப்படியும் அப்படியுமின்றி,

**"நம்நம் மொழிஇனங்களை நாம்நாமே ஆள்வோம்! இந்தியாவை எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து ஆள்வோம்!"**

என்னும் முழக்கத்தில் குழப்பத்தின் கூறு உண்டெனினும், அதனின்று மிக்குயர்ந்து நின்றது சாலையாரின் இனவிடுதலை வேட்கை என்பதே உண்மை. பேச்சளவில் உருசிய வாய்பாட்டை நெட்டுருபண்ணிக்கொண்டு, 'சுயநிர்ணய உரிமை' என்னும் சொல்லாக்கத்தைச் சங்கத(சமற்கிருத) மொழியில் தனிநாட்டுரிமை எனத் தமிழ்ப்படுத்தாமல், ஆணாகவும் இன்றிப் பெண்ணாகவும் இன்றி அலியாய் எலியாய்ப் போன 'தன்னுரிமை' என்னும் சொல்லை வெள்ளோட்டம் விட்ட போலித் தமிழ்த் தேசியர்களின் கூப்பாட்டைப் போன்றதன்று சாலையாரின் தமிழ்த் தேசிய அறைகூவல்.

**"அணிபெறத் தமிழர் கூட்டம்**
**போர்த்தொழில் பயில்வது எண்ணிப்**
**புவிஎலாம் நடுங்கிற் றென்ற**
**வார்த்தையைக் கேட்டு நெஞ்சம்**
**மகிழ்ந்து கூத்தாடல் என்றோ?"**

என்னும் பாவேந்தரின் ஏக்கத்தையும் ஊக்கத்தையும் அடிநெஞ்சில் என்றுமே தேக்கி நின்ற தமிழரினப் போராளி சாலை இளந்திரையனார்.

சாலையாரின் நினைவுநாளை நெஞ்சில் ஏந்துவது என்பதற்கு, எந்தமிழ்க் காளையரும் பெண்டிரும் அடிமையுண்ட தமிழரினத்தை ஆர்த்தெழச் செய்ய வேண்டுமாயின், வடுக வந்தேறிக் குறும்பர்களை வேரறுக்கவும் விரட்டியடிக்கவும் செய்ய வல்ல ஊக்கத்தையும் அறிவுவினையையும் செயல்வினையையும் தரவல்ல தாய்ப்பாலை ஊட்டுவது என்றே பொருள்கொள்ள வேண்டும். Ø

திராவிட மாயை.....

டும். அதுவும் தன்மான உணர்வும் தன்மதிப்பு மதுகையும் கொண்ட தனித்தமிழனின் தலைமைதான் வேண்டும்.

கன்னடனும் தெலுங்கனும் மலையாளியும் அந்த அந்த இனங்களுக்குத் தலைமைதாங்கிக் கொள்ளட்டும்! ஏமாளிகளிலெல்லாம் கடைகெட்ட ஏமாளிகளான தமிழர்களை மறுபடியும் மறுபடியும் ஏமாற்றி, நம்பவைத்து நம்பவைத்துக் கழுத்தறுக்காமல் தமிழர்களிடமிருந்து திராவிட வந்தேறிகள் விலகி விலகிச் செல்லட்டும்!

தமிழர்களைப் பிடித்திருக்கும் **'திராவிட'** மாயை அகலட்டும்! வந்தேறிகளின் கொடும்பிடிகளிலிருந்து தமிழ்நிலத்தை விடுவித்துத் தமிழர்க்கான தன்னுரிமைத் தாயகத்தைச் சமைக்கத் தமிழினம் முழுதுமே வீறுகொண்டு சீறி எழட்டும்!

**தனித்தமிழ் நாடும் தனித்தமிழ் ஈழமும்**
**தமிழனின் இரு விழிகள்!**

**வெல்க தமிழினம்!**

நொப்பன் கொரவளை.....

"நீயும் திராவிடன், நானும் திராவிடன்; நாமிருவரும் அண்ணன் தம்பிகள்!" என்று இதுவரை எங்களிடம் பம்மாத்துப் பண்ணியதும் போதும்! கால' நேரம் பார்த்து ஈரத்துணிகளைப் போட்டு எங்களின் கழுத்துகளை நெரித்ததும் போதும்!

"சந்தைக்குச் சந்தை அறுத்துக் கட்டும் தொட்டிய நாயக்கச்சி"களின் பண்பாடுகளும், "மகன் கையால் தாலி கட்டவைத்து மருமகளைப் பெண்டாட்டியாக வைத்துக்கொள்ளும் கம்பளத்தார்" பண்பாடுகளும் இந்த மண்ணுக்கு வேண்டவும் வேண்டாம்! மதுரை நாயக்க 'மாமா'க்களும், ஆர்க்காட்டு நாயுடு 'மாமா'க்களும் தமிழக முதல்வர்கள் ஆகவும் வேண்டாம்!

காமாட்சி நாயக்கரே! உங்களுக்கு வன்முறைகளில் நம்பிக்கை இல்லை என்று நீங்களே கூறிவிட்டீர்கள்...! அதனால், எங்களையும் வன்முறைகளுக்குத் தூண்டாதீர்கள்! வம்புச் சண்டைக்கும் போகாத, வந்த சண்டையையும் விடாதவர்களான தமிழர்களின் தென்பாண்டிச் சீமையில் யாரையாவது சீண்டிவிட்டால், **"அப்படி வாடா நொப்பன் கொரவளை!"** என்று நறநறவென்று பற்களைக் கடித்தபடியே அரிவாளை ஓங்குவார்கள். அடுத்து என்ன நடக்கும் தெரியுமா... ? கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமே...? ஏமண்டி காமாட்சிகாரு, செப்பண்டி....?

**தமிழர்நிலத்தை விடுவிப்போம்!**
*தமிழ்நாடு தமிழர்க்கே!*

---

*நன்றி: தமிழர் தன்மதிப்புப் பாசறை, மதுரை*

தீர்மானங்கள் .....

வர உயிரையே விலையாய்க் கொடுத்து உழைத்து நலிந்தனர் தங்கவயல் தமிழர்கள். அவர்களின் எதிர்காலமே வெறுமையாகும் வகையில், ஊழல் அதிகாரிகளால் சுரண்டி முடக்கப்பட்ட சுரங்கங்களை மூடிவிடுவதென முடிவுசெய்து, அவற்றின் மூடுவிழாவை நோக்கிக் காய் நகர்த்தி வருகிறது நடுவணரசு. தமிழர்கள் என்பதற்காகவே கருநாடக அரசு அவர்களின் எதிர்காலம் வெறுமையாகும் அவலத்தைத் தடுக்கச் சுண்டுவிரலையும் அசைக்கவில்லை. சுரங்கமாவது தொலைந்து போகட்டும். ஆனால், நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வளம்பெருக்கிய அத்தமிழரின் இருப்பிடங்களையும் பறித்து அந் நகரத்தைப் பாழ்ப்படுத்தும்வண்ணம் தமிழ்த் தொழிலாளர்களைத் தத்தம் வாழ்விடங்களிலிருந்து வலிய இடம்பெயர்த்து மெல்ல விரட்டுகின்ற முயற்சியில் தங்கவயல் நிறுவகமும் ஈடுபட்டுவருவதை இம் மாநாடு மிக வன்மையாகக் கண்டிக்கிறது. "தமிழர்களின் பிழைப்பைத்தான் கெடுத்தனர், அத் தமிழரின் ஊரையுமா கெடுக்க வேண்டும்?" எனக் கேட்டு, அத்தகைய முயற்சியைத் தங்கவயல் தமிழர்கள் தாங்களாகவே ஓர்ந்து அறிந்து தடுத்து முறியடிக்க ஆவன செய்ய வேண்டுமென இம் மாநாடு அறைகூவல் விடுகிறது. தங்கவயல் தமிழர்களுக்கு மாற்றுத் தொழிலகங்களை அமைத்து அவர்களின் மறுவாழ்வுக்கு உறுதிச்செய்து தரப்பட வேண்டும் என மாநில, நடுவண் அரசுகளை இம் மாநாடு வலியுறுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் குரல் (கர்நாடகம்)

## காசரைக் கோட்டில் வாலாட்டும்! கர்நாடகத்தில் வெறிபிடித்து ஆடும்!! கன்னட வெறியரின் இரட்டை வேடம்!

**தமிழ்மறவன்**

கேரள கர்நாடக எல்லையில் உள்ளது காசர்கோடு (காசறைக்கோடு) மாவட்டம். இது கேரள மாநில எல்லைக்குள் இருந்தாலும் மலையாளிகள் இங்கு சிறுபான்மையினரே! இங்கு கன்னடர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். தமிழர்கள் இரண்டு இலக்கத்திற்கு மேல் உள்ளனர். உலகந் தழுவிய மாக்சியம் பேசும் சிவப்புத் தோழர்கள், அனைத்தையும் மலையாள மயமாக்கும் முயற்சியில் இறங்கிய போது காசர் கோட்டை விட்டு வைத்தார்க ளில்லை. அரசின் எல்லா துறைகளிலும் மலையாளத் தை மட்டுமே பயன்படுத்தும்படி ஆணை பிறப்பித்தனர்! காவல் துறை அறிக்கை, முதலறிக்கை, நயன்மை மன்ற ஆவணங்கள் என்று எல்லாம் மலையாளம் ஆனது!

கன்னடர்கள் விடுவார்களா? மாநாடு, மனு, போராட்டம் என்று அறிவித்து மலையாளிகளுக்கு எதிராக களத்தில் குதித்து விட்டார்கள். கன்னடர் களின் கட்சிகளெல்லாம் ஓரணியில் திரண்டு நின்று காசர் கோட்டை உடனடியாக கர்நாடகத்துடன் இணைக்க வேண்டும் என்று கூப்பாடு போட ஆரம்பித்து விட்டனர். கன்னட இன வெறி அமைப்புகளெல்லாம் கமுக்கமாய் காசு அனுப்பி அப் போராட்டங்களுக்கு நல்ல ஆதரவு அளித்து வருகின்றன.



இதே போல தமிழர்களின் மரபு வழித் தாயகத்தின் ஒரு பகுதியான தளி, ஓசூர் போன்ற பகுதிகளை கர்நாடகாவுடன் இணைக்க வேண்டும் என்று ஒரு வடுகக் கூட்டம் தமிழகத்தினுள்ளேயே மாநாடு போட்டுவிட்டு திரும்பியிருக்கிறது. விரல்விட்டு எண்ணக் கூடிய அளவில் மட்டுமே உள்ள கன்னடர்கள், தமிழகத்தின் வளமான பகுதிகளை கர்நாடகாவுடன் இணைத்துவிடலாம் என்று கனா காணுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்டதைத்தான் நினைவுபடுத்துகிறது.

களப்பிரர் காலம் தொட்டு கவுடாக்களின் காலம் வரை கன்னட அரசியலாளிகளெல்லாம் தமிழர்களை மட்டுமே எதிரிகளாகச் சித்தரித்து வந்தனர். இறுதியில் தமிழர்களுக்கு எதிராக ஒரு இனப் படுகொலையையே அரங்கேற்றிவிட்டனர். அரவமின்றி சுற்றித்திரியும் அக் கன்னடக் கொலைஞர்கள் இப்போது காசர்கோட்டை கன்னட நாட்டுடன் இணைக்கும் போராட்டத்தில் வாருங்கள் வாருங்கள் என்று தமிழர்களை எச்சில் சப்பி வரவேற்கின்றனர். "இணைந்து போராடுவோம் வாருங்கள்!" என்று எல்லா தமிழர் அமைப்புக்களையும் அழைக்கிறார்கள்.

வெங்காலூர் 70 விழுக்காடு தமிழர்களைக் கொண்ட ஒரு பகுதி! கோலார் 100 விழுக்காடு தமிழர்களை உள்ளடக்கிய பகுதி. வெங்காலூரை ஒட்டியுள்ள 12 சட்டமன்றத் தொகுதிகளில் தமிழர்களே பெரும்பான் மையினர். இதையெல்லாம் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்கிற ஞாயம் பிறக்காத கன்னடக் கழி மூளையில் திடீரென காசர்கோடு பற்றிய ஞானம் சிரங்கு போல எழுந்திருக்கிறது. கர்நாடகத்தில், எத்தனைத் தமிழ்ப் பள்ளிகளை கன்னடர்கள் மூடினார்கள்! எத்தனைத் தமிழர்களை கன்னடர்கள் திசம்பர் 1991 இல் கொன்று குவித்தார்கள். கோலார் தங்கவயலில் மொழி உரிமைக்காகப் போராடிய எத்தனைத் தமிழர்களை கன்னடக் காவல் காடைகள் சுட்டு வீழ்த்தின?! வள்ளுவனுக்கு சிலை எங்கே? தமிழரின் வாழ்வுரிமை எங்கே? காவிரியில் தண்ணீர் எங்கே? இதற்கெல்லாம் கன்னடன் விடையளித்த பின்னரே காசர்கோட்டு வினாக்களுக்கு விடை தேட முடியும்.

கன்னடத்தியான செயலலிதா தமிழகத்தின் ஆட்சி மேடையில் தொற்றிக் கொண்டிருந்தபோது "15 விழுக்காடு சிறுபான்மையினர் ஒரு பகுதியிலிருந்தால் அவர்கள் பேசும் மொழி இணை ஆட்சி மொழியாகும்!" என்று கமுக்கமான ஆணை ஒன்றினைப் பிறப்பித்தார். அதே ஆட்சி மேடையில் இப்போது தொங்கிக் கொண்டிருக்கும் தெலுங்கரான கருணாநிதி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தெலுங்கர்களுக்கு 50 இடங்கள் என்று இருந்ததை ஒரே ஆண்டில் மாற்றி 130 என்று அரவமின்றி ஆக்குகிறார். தனது அமைச்சரவையில் ஏழு இடங்களைத் தெலுங்கர்களுக்கு கொடுத்துள்ளார். தமிழகத்தில் 35 சட்ட மன்ற உறுப்பினர்கள் தெலுங்கர்கள். ஆனால் பெங்களூர் தமிழ்க் கழகத்தின் பெயர்ப்பலகையைக்கூட கன்னடத்தில்தான் எழுதி வைக்க வேண்டிய கட்டாய இழி நிலை இங்குள்ள தமிழனுக்கு வந்துள்ளது.

விடுதலைப் போராட்ட வீரன் புலித் தேவனையும், அறிவுக்கு ஆசான் பாவாணரையும், இசை அறிஞர் அயோத்தியதாசப் பண்டிதரையும், அடித்தட்டு மக்களின் விடுதலைக்கு அரும்பாடு பட்ட இரட்டை மலை சீனிவாசனையும் இன்னும் பல அரிய தமிழர்களையெல்லாம் எண்ணத் துணியாத வடுகர் கொள்ளையன் கட்டபொம்முக்கு அஞ்சல்தலை வெளியிட படாதபாடுபடுகிறார்கள்.

தமிழர்கள் சாதி, கட்சி, மதம் ஆகிய மூன்றையும் மறுத்து தமிழர்களாய் ஒன்றிணைந தாலேயே இவ் வடுக வந்தேறிகளின் வலைக ளிலிருந்து தப்பி விடுதலை வாழ்வு பெற முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வெங்காலூர் தமிழ்க் கழகத்தில் மூக்கறுபட்ட இல. கணேசன்!

அயோத்தியில் இராமபிரானுக்கு கோயில் எழும்புவதை எந்த ஷக்தியாலும் தடுக்க முடியாது (அந்த அயோத்தியிலேயே அண்மையில் நடந்த ஒரு தேர்தலில் பாரதீய சனதாவின் டப்பா கழன்றது என்பது மற்றொரு செய்தி!) என்று பிதற்றித் திரியும் இல. கணேசனை பெங்களூர் தமிழர்கள் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்துள்ளனர்.

2.1.99 அன்று மாலை அல்சூர் ஏரிக்கரையில் அமைந்துள்ள தமிழ்க் கழகக் கூட்டத்திற்கு இல. கணேசன் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டி ருக்கிறார். மிகத் தாமதமாக வந்திறங்கிய இல. கணேசன் "ஷரி! நேரடியாக கேள்விகளுக்குப் போவோம்!" என்று நல்ல வடுக உச்சரிப்போடு பேச, முத்தமிழ்க் காவலர் மன்ற அமைப்பாளர் தமிழ் மறவன் அவர்கள் எழுந்து "தமிழ்க் கழகம் வெங்காலூரில் அமைத்துள்ள திருவள்ளுவர் சிலயினைத் திறக்க விடாமல் நயன்மை மன்றத்தில் எடுத்துரைத்துத் தடுத்தவர் உங்கள் இயக்கச் சட்டமன்ற உறுப்பினர் பிரமிளா நேசாகி அவர்கள்தான்! அது ஏன்?" என்று கேட்டபோது திக்கு முக்காடிப் போனார் இல கணேசன்.

அடுத்து, "1991 ஆம் ஆண்டு திசம்பர் 13 ஆம் நாள் தமிழர்கள் இங்கு படுகொலை செய்யப்பட்ட போது உங்கள் தலைவரான முரளி மனோகர் சோசி இராமர் கோயில் கட்ட செங்கல்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அன்றைய நாளில் அவர் பெங்களூர் வந்தார். தமிழர்கள் இங்கு அரத்த வெள்ளத்தில் அடுத்தடுத்து வீழ்ந்தபோதும், அந்த விலங்காண்டித் தனமான தாக்குதலை ஒரு சொல்லால் கூட கண்டிக்க முன்வராத அவர் மெல்ல நழுவி பெங்களூரைச் சுற்றி பீனியா, நெலமங்களா, தும்க்கூர் வழியாகப் பறந்து விட்டாரே ஏன்?" என்ற அடுத்த நெருப்பு வினா வந்து விழுந்தபோது, காவிரி உடன்பாட்டை வாச்பேய்தான் தீர்த்து வைத்துள்ளார் என்று என்ன பேசுகிறோம் என்பதே புரியாதது மாதிரிப் பேசியிருக்கிறார்.

கூட்டத்திலுள்ளவர்கள் இல. கணேசனின் திண்டாட்டத்தைக் கண்டு கமுக்கமாகச் சிரித்து வைக்க அவரைக் காப்பாற்ற பெங்களூர் நகர பாரதீய சனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் சூரிய பிரகாசு, கேள்விகளை வேறு யாராவது கேளுங்கள் என்று கேட்டுக் கொள்ள கடைசியில் செய்வதறியாது விழித்து கூட்டத்தை சட்டுபுட்டு என்று முடித்துவிட்டு மூட்டை முடிச்சிகளோடு கழன்று கொண்டனர். "காவிரி ஆற்று நீர்ப் பங்கீட்டுக் குழுவை ஏற்படுத்தினால் கர்நாடகாவில் அரத்த ஆறு ஓடும்!" என்றும் "பல உயிர்ப் பலிகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்!" என்றும் எடியூரப்பா உட்பட பல பாரதீய சனதாவின் மூத்த தலைவர்களெல்லாம் தமிழரின் அரத்தத்திற்காக நாக்கைச் சப்பிப் பேசிய பேச்சுகளுக்கு (25.06.97 அன்று) இல. கணேசனிடம் விளக்கம் கேட்கக் கூடியிருந்த தமிழர்கள் முயற்சிக்க, நிலைமையின் நெருப்புத் தன்மையை உணர்ந்த இல. கணேசன் மாயமாய் மறைந்தார்!

--சிற்பி, வெங்காலூர்

## நடுவணரசு அலுவலகத்தில் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு! எதிர்த்து கன்னட வெறி அமைப்புகள் தொடர் போராட்டம்!!

நடுவணரசின் "பணியாளர் தேர்வு ஆணையத்தின்" கீழ் பல்வேறு நடுவணரசின் அலுவல் களுக்கு ஆள் சேர்க்கும் பணி நடைபெறுகிறது. ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது சில ஒதுக்கீட்டு முறைமைகள் இருக்கின்றன. ஆனால், ஒரு மாநிலத் தில் பணியாற்ற அந்த மாநிலத்தைச் சார்ந்த ஒருவர் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது. எடுத்துக்காட்டுக்கு தமிழகத்தில் உள்ள அம்மாதிரியான ஒரு அலுவலகத்தில் தேர்ந்தெடுக்கப் படுபவர் கட்டாயம் தமிழராக இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. இது குறித்து உச்ச நயன்மை மன்றத்தின் ஒரு ஆணையும் இருக்கிறது.

ஆனால் வழக்கமாகவே கர்நாடக அரசும், கன்னட அமைப்புக்களும் சட்ட நெறி முறைகளை பின்பற்றுவது கிடையாது என்பது உலகறிந்த உண்மையே!

அண்மையில் கணக்குத் தணிக்கை அலுவலகத்திற்கான ஆள் சேர்க்கும் போது விடுபட்டிருந்த பல இடங்களில் 19 இடங்களுக்கு தமிழ் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவ்வளவுதான்! கர்நாடக கீர்த்தி சமிதி எனும் கன்னட வெறி அமைப்பு ஒன்று ஆட்களை அமர்த்தி போராட்டத்தில் குதித்துள்ளது. பெங்களூரில் அமைந்துள்ள கணக்குத் தணிக்கை அலுவலகத்தைச் சரமாரியாக கல் வீசித் தாக்கியுள்ளனர். கடந்த 5 ஆம் நாளிலிருந்து தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள். கன்னட சக்தி கேந்திரா என்கிற அமைப்பின் தலைவர் சித்தானந்த மூர்த்தி போன்ற பலரும் ஓரணியில் திரண்டு தமிழ் இளைஞர்களை விரட்டியடிப்பதில் குறியாய் உள்ளனர்.

திராவிடப் பிண்டங்களும், முண்டங்களும் தாய்த் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆட்சி அதிகாரத்தில் தொங்கிக் கிடக்கையில் நன்கு படித்து திறமையின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற தமிழ் இளையோருக்கு நேர்ந்திருக்கிற கொடுமை ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போலத்தான்.

தமிழகத்தில் உள்ள எல்லாத் துறைகளிலுமுள்ள தமிழர்களும் இனியாவது கூர்மையான பார்வை கொண்டு வந்தேறிகளின் ஊடுருவலை கண்ணுற்று பின் களைந்தெடுத்தாலேயே இனி வரும் காலத்தில் தமிழனுக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும். தமிழர் நாடு தமிழருக்கே என்று உரக்க முழங்கு!! (அருள்ராசு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருநாடகத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுத் தீர்மானங்கள்

கருநாடகத் தமிழர் இயக்கம் தன்னுடைய முதல் மாநாடாக தி. பி. 2029நளி 2 (ஆங்கிலம் 13.12.1998) அன்று பெங்களூரில் நடத்திய கருநாடகத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

**தீர்மானம் 1**

ஓர் இனத்து மக்கள், தாம் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் என்னும் மனநிறைவுடனும், தங்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் எவ்வித அரசியல், பொருளியல், வாழ்வியல் நெருடல்களும் இல்லா வண்ணம் முழு உரிமைகளுடனும், தங்கு தடையற்ற — வேறுபாடற்ற — அமைதியான சூழலில் வாழ்வதற்கான வாய்ப்புகளைக் குறிப்பதே வாழ்வுரிமை.

ஆயினும், 1956க்குப் பிறகு, பெருநகரங்களில் — குறிப்பாகப் பெங்களூரில் — குடியேறிய கன்னடர்கள், ஆயிரமாண்டிற்கு மேலாக இங்கு வாழ்ந்து வரும் தமிழர்களை இனக்காழ்ப்பு அரசியலால் கொச்சைப்படுத்திக் கொடுமைப்படுத்தி ஒழித்துக் கட்டிவிட எண்ணி, இனவெறி அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு எதிராகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். இனியும் வாளாவிருந்தால், எஞ்சியிருப்பதும் பறிபோகும் என்பதை உணர்ந்து, ஒன்றுபட்ட போராட்ட நடைமுறையே — அதைத் தொடர்ந்து ஆற்றும் உருப்படியான செயல்களே — நம்மைத் தற்காத்துக்கொள்ள எஞ்சியிருக்கும் ஒரே வழி என்பதை நாம் கட்டாயம் உணர்ந்தாக வேண்டும். கருநாடக அரசு உட்பட்ட அனைத்துத் தமிழரெதிர்ப்பு ஆற்றல்களையும் எதிர்த்துப் போராட நாம் அணியமாக வேண்டும்.

இன்றைய உறக்க நிலையை — கையறுநிலையை — அச்சநிலையை — உதறித் தள்ளி, குறுகிய கட்சி, சாதி, அரசியல் எல்லைகளைத் தாண்டித் தமிழர் ஒற்றுமை என்னும் புதிய அடையாளத்துடன் நம்முடைய வாழ்வுரிமைகளை மீட்டெடுக்கவும் போராடவும் இந்தக் கருநாடகத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் உறுதியேற்போம்.

**தீர்மானம் 2**

காவிரி நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, ஏதுமறியாக் கருநாடகத் தமிழர்களின்மீது கருநாடக அரசே திட்டமிட்டு நடத்திய 1991 திசம்பர் இனக்கொலைகளில் பச்சையாகப் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் 1000 பேராவர். தமிழச்சிகள் பலர் மிகக் கொடுமையாகக் கற்பழிக்கப்பட்டனர். பச்சிளம் குழந்தைகளும் தள்ளாத மூதாட்டியரும்கூடக் கன்னட இனவெறி மூட்டிய இனவேள்வித்தீயில் அள்ளிப் போடப்பட்டனர். ஓரிலக்கம் பேருக்குமேல் ஏதிலியராகத் தமிழ்நாட்டிற்கு ஓடினர். இவ்வளவு பெரிய இனப்படுகொலையை அரசே திட்டமிட்டு நடத்தியதால், வன்முறையாளர் எவர்மீதும் இது வரை ஒற்றை வழக்குங்கூட இல்லை. தமிழர்களின் சொத்துகள் மாநிலம் முழுவதும் ரூ 1000 கோடி அளவுக்கு அழிக்கப்பட்டும், உரிய இழப்பீடு தரப்படவும் இல்லை. கருநாடகத் தமிழர்மீது நடத்தப்பட்ட ஒரு மிகப் பெரிய இனப்படுகொலை முற்றாக மூடி மறைக்கப்பட்டுவிட்டது. இது போன்ற இருட்டடிப்பு உலகிலேயே நடந்திராததொன்று.

இத் துணைக்கண்டத்தில் பல்வேறு தேசிய இனங்களும் மாறுபட்ட பண்பாடுகளும் இருக்கின்ற மெய்ம்மையை மறைத்துவிட்டு, "ஒரே நாடு! ஒரே மொழி! ஒரே பண்பாடு!" எனப் பேயாய்க் கூவிவரும் 'இந்துத்துவ' கொடுவெறியர்கள், கருநாடகத் தமிழர் மீது அப்போது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலையில் முன்னணிப் பங்கை வகித்தனர். பேராயக் (காங்கிரசு) கட்சியே அவ்வளவு பெரிய இனப்படுகொலையைக் கருநாடகத் தமிழர்மீது நடத்தியதால், இந்தி(ய)த் தேசியமும் தன் காதையும் கண்ணையும் வாயையும் இறுகப் பொத்திக்கொண்டது.

உலகநாடுகள் அவை (UNO) வரையறுத்துள்ள நெறிமுறைகளின்படி, இனப்படுகொலை செய்வது ஒரு பெரிய தீங்கியல் குற்றமாகும். இனப்படுகொலை செய்தல், இனப்படுகொலை புரியச் சூழ்ச்சி செய்தல், இனப்படுகொலை செய்யச் சொல்லி நேரடியாகவோ மறைமுகமாகவோ தூண்டுதல், இனப்படுகொலை செய்ய முயலல், இனப்படுகொலைக்கு உடந்தையாக இருத்தல் ஆகிய ஐவகைக் குற்றங்களில் ஏதாவது ஒன்றைச் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டவரை வழக்குமன்றத்தின்முன் நிறுத்தி முறையாக உசாவித் தண்டிக்க வேண்டுமென இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுப்பதும் தண்டிப்பதும் பற்றிய உலக நாடுகள் அவையின் மாநாடு (UN Convention on the Prevention and Punishment of the Crime of Genocide) 9.12.1948 அன்று நிறைவேற்றிய தீர்மானம் ஐயம்திரிபறக் கூறுகிறது. இம் மாநாட்டுத் தீர்மானத்தில் இந்தி(ய) அரசுங்கூடக் கையெழுத்திட்டுள்ளது. ஆயினும், அந்த இந்தி(ய) அரசு, கருநாடகத் தமிழர்மீது நடத்தப்பட்ட மாபெரும் இனப்படுகொலையைக் கண்டும் காணாமல் இருந்து, அதற்குத் துணை போனது. உதவாத வெங்கடேசு ஆணையம் முன்வைத்த அறிக்கையையுங்கூடக் கருநாடக அரசு இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந் நிலையில், இனி யாரையும் நம்பி — கண்களில் ஏக்கத்தைச் சுமந்து — நிற்பதை விடுத்து, கருநாடகத் தமிழர்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளவும், மொழிச் சிறுபான்மையருக்கு உரிய உரிமைகளையும் பண்பாட்டு நலன்களையும் கண்ணெனப் பேணிக் கொள்ளவும் சொந்தக் காலில் நிற்கப் பழகிக்கொள்ளவும் வேண்டுமென இம் மாநாடு அறைகூவல் விடுக்கிறது. கருநாடகத் தமிழரின் இனக்காப்பு உணர்வையும் ஓர்மையையும் ஓம்புகின்ற நோக்கிலும் போக்கிலும் ஒவ்வோர் ஆண்டும் திசம்பர் 13ஆம் நாளைக் கருப்புநாளாகக் கடைப்பிடிக்கவும் இம் மாநாடு முடிவு செய்கிறது.

**தீர்மானம் 3**

கருநாடகத்தின் பழைய மைசூர்ப் பகுதியில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் பழந்தமிழரான திகிழரும், பின்னர் வந்து குடியேறிய புதுத்தமிழரும் சேர்ந்து கருநாடக மக்கள்தொகையில் மொத்தம் ஒரு கோடிப் பேராவர். இவர்களில் பழஞ்சவை (உரோமன் கத்தோலிக்கர்), எதிர்சவை (புராட்டஸ்டண்ட்) கிறித்துவர்களின் எண்ணிக்கை மட்டும் — அவரவர் திருஅவைகளில் முறைப்படி பதியப்பட்டுள்ள கணக்கின்படி — 20 இலக்கம் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடகு மாவட்டத்தின் எண்ணிக்கையில், குடகு தேசியஇனத்தவர்க்கு அடுத்த நிலையில் இருக்கும் தமிழர்கள், அம் மாவட்டத்தின் மக்கள்தொகையில் 25 விழுக்காட்டினராவர். பழைய மைசூர்ப் பகுதியில் திகிழரே தொல்குடிகளாவர். இந் நிலையில், ஒரு கோடியாக இருக்கும் கருநாடகத் தமிழரின் மக்கள் தொகையை வெறும் 9 இலக்கமே என அடாவடித் தனமாகக் குறைத்துக்கூறி எண்ணிக்கை விளையாட்டு ஆடிவரும் கன்னட இனவெறி அரசுக்குத் தோள் கொடுக்கும் சில தமிழ் அமைப்புகளும்கூடக் கருநாடகத்தில் வாழும் தமிழரின் மக்கள்தொகை 30 இலக்கம் எனப் பொய்ப்பாடம் படிக்கின்றன. கருநாடகத்தில் தமிழரை அழித்தொழிக்கும் நோக்கத்திலும்— சிறுபான்மையருக்கு உலகநெறிப்படியும் இந்தி(ய) அரசுச்சட்டத்தின்கீழும் வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகளை மறுக்கும் நோக்கத்துடனும் கன்னட அரசால் திட்டமிடப்பட்டப்படி நடத்தப்படும் சூழ்ச்சியே இந்த எண்ணிக்கை விளையாட்டு என்பதைக் கருநாடகத் தமிழருக்கும் — அவர்களை ஏறெடுத்தும் பார்க்க மறுக்கும் தமிழர்நாட்டு அரசியலார்க்கும் மக்களுக்கும் — புலப்படுத்துவதென இம் மாநாடு முடிவெடுக்கிறது.

### தீர்மானம் 4

எண்ணிக்கையில் ஒரு கோடியினராயினும், கருநாடகத் தமிழர்கள் தம் தாய்மொழியைக் கற்பதை என்னென்ன வகைகளில் தடுக்கவும் கெடுக்கவும் முடியுமோ, அந்தந்த வகைகளிலெல்லாம் கன்னட வெறி அரசு முயன்று வருகிறது. தமிழ் தெரியாத் தலைமுறைகள் தமிழரிடையே தோன்றிவிட்டன. **மொழியை மறந்தால் இனம் இல்லை** என்னும் மெய்ம்மைக்கு ஏற்ப, கருநாடகத் தமிழர்கள் தத்தம் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்பிப்பதில் உரிய கவனம் காட்டுமாறு இவ் வாழ்வுரிமை மாநாடு கருநாடகத் தமிழரைக் கேட்டுக்கொள்கிறது. கன்னடம் படித்தாலும் கன்னடத்தில் எவ்வளவு உயரிய மதிப்பெண் எடுத்துக் கிழித்தாலும், தமிழர்களுக்கு வேலை வாய்ப்புகள் தரப்படுவதில்லை என்னும் நடப்புண்மையை எண்ணிப் பார்த்து— அரசுசாரா அமைப்புகள், இரவுப்பள்ளிகள் ஆகியவற்றின் வாயிலாக அடிப்படைத் தமிழ் எழுத்தறிவைத் தரும் தமிழ்க் கல்வித் திட்டங்களின் வழியாகவும் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் பிற தமிழர்களுக்கும் தமிழைக் கற்பிக்க முயல வேண்டுமெனத் தமிழமைப்புகளையும் இனவுணர்வாளர்களையும் இம் மாநாடு வேண்டுகிறது.

### தீர்மானம் 5

சிறுபான்மை மொழியினர் குவிந்து வாழும் பகுதிகளில் அவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட விழுக்காட்டுக்கு இருந்தால், அவர்தம் மொழியைத் துணை ஆட்சிமொழியாக்க வேண்டுமெனச் சட்டதிட்டங்கள் உண்டு. கருநாடகத் தமிழரைப் பொறுத்தவரையில் இதுவரை நடைமுறையில் இல்லை. அந் நெறிகளுக்கு இசைய, தமிழர்கள் பெரும்பாலோராகவுள்ள பகுதிகளில் தமிழ்மொழி துணைஆட்சி மொழியாகச் செய்யப்பட வேண்டுமென மாநில, நடுவண் அரசுகளை இம் மாநாடு வலியுறுத்துகிறது.

### தீர்மானம் 6

நெறிகளையும் ஞாயங்களையும் இந்திய அரசுச் சட்டத்தையும் மதியாது, கருநாடகத் தமிழரில் கிறித்துவர்கள் தங்களின் தாய்மொழியில் வழிபடும் உரிமையைப் பறிக்கக் கன்னடவெறியர்கள் அயராது பாடாற்றி வருகின்றனர். தம் அடிப்படை உரிமையைப் பறிக்க இடம் கொடோம் எனப் பழஞ்சவை (உரோமன் கத்தோலிக்கத்) தமிழ்க் கிறித்துவர்கள் பல்லாண்டுகளாகத் தனித்து நின்று களம் பல கண்டு பெருமை கொண்டுள்ளனர். தமிழரில் பிறரெல்லாம் குட்டக் குட்டக் குனிந்துகொண்டே இருக்கையில், தமிழுக்காக — தமிழ் உரிமைக்காக — போராடிய ஒரே தமிழர் பிரிவினர் தமிழ்க் கிறித்துவர் மட்டுமே என்னும் தனிச்சிறப்பு அவர்களுக்கு உண்டு. கருநாடகத்திலுள்ள கிறித்துவரில் 85 விழுக்காட்டினர் தமிழர்களே என்பதாலும், தமிழர் என்னும் ஆளுமையும் கிறித்துவர் என்னும் ஆளுமையும் ஒரு சேர விளங்குவதாலும், 'இந்துத்துவக்' கொள்கையின் அதிரடிப்படைகளாக உருமறைந்து இயங்கும் கன்னட இனவெறி அமைப்புகள் தங்களின் முதல் தாக்குதல் குறியாகத் தமிழ்க் கிறித்துவரைத் தேர்ந்தெடுத்துள்ளன. பெங்களூர் மறைமாவட்டத்தில் மட்டுமே இதுவரை முடங்கியிருந்த கன்னட வெறியரின் கிறித்துவத் தமிழர் எதிர்ப்புக் குறும்புகள், மைசூர் மறைமாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டன. மைசூர் நகரத்திலுள்ள கிறித்துவர்களில் 70 விழுக்காட்டினர்க்கு மேல் தமிழரே என்றிருப்பினும், அங்குத் தமிழ் வழிபாடு நடைபெறக் கூடாது எனக் கன்னட மேம்பாட்டுத் துறையின் தலைவரே தோள் தட்டி நிற்க, மைசூர்த் தமிழ்க் கிறித்துவரின்மீது வெறித்தனமான காவல்துறை வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இந் நிலையில், மொழி காக்க — தாய்மொழியில் வழிபடும் உரிமை காக்க — களத்தில் நிற்கும் தமிழ்க் கிறித்துவர்களுக்குக் கருநாடகத் தமிழர் அனைவரும் துணைநிற்கவும் தோள் கொடுக்கவும் வேண்டுமென இம் மாநாடு அறைகூவல் விடுக்கிறது. அதே போல், அனைத்துத் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவதில் கருநாடகத் தமிழ்க் கிறித்துவர்களும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

### தீர்மானம் 7

தமிழரினத்தின் மீவுயர்ந்த அறிவுநெறியைக் குறிக்கும் கருவூலமான திருக்குறளை யாத்த வான்புகழ் வள்ளுவனின் சிலையைத் திறக்கவிடாமல் கந்தல்களால் கட்டிமறைத்து வைத்துள்ளனர். திருவள்ளுவர் சிலையை உடனே திறக்கக் கருநாடக அரசும் பெங்களூர் மாநகராட்சியும் ஆவன செய்யுமாறு இம் மாநாடு வலியுறுத்துகிறது.

### தீர்மானம் 8

சந்தன வீரப்பனுக்கு உதவியவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கருநாடக அதிரடிப்படையினரால் தளைப்படுத்தப்பட்ட ஏழை பாழை தமிழர்களின் மீது நடத்தப்பட்ட மெய் வருத்தல், கற்பழித்தல், வீடுவாசல்களையும் குடும்பங்களையும் அழித்தல் போன்ற அரசு வன்முறைகள் போதாதென்று, அவர்களில் 162 பேரைத் 'தடா' என்னும் ஆள்தூக்கிச் சட்டத்தின்கீழ்த் தளைப்படுத்தவும் செய்தனர். தமிழர்கள் என்பதற்காகவே அவர்களைச் சொல்லொணாப் பாடுபடுத்தியது கன்னடக் காவல்துறை. அவர்களில் 72 பேரைத் (இவர்களில் 12 பேர், கற்பழிப்புப் போன்ற கொடுமைகளுக்கு ஆளான பெண்கள்) 'தடா' செத்த பிறகும் வழக்கு மறுஆய்வுக் குழுவை அமைக்காமல் எட்டு ஆண்டுகளுக்குமேல் மைசூர்ச் சிறையில் உசாவல் ஏதுமின்றி அடைத்து வைத்துள்ளது இக் கருநாடக அரசு. இந்த ஏழை பாழைகளை உடனே விடுவிக்க வேண்டும் என இம் மாநாடு கோருகிறது.

### தீர்மானம் 9

நூறாண்டுகளுக்கு மேலாகத் தங்கவயல் சுரங்கங்களில் அடிமடியில் படர்ந்திருந்த தங்கத்தை எடுத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காண்க பக். 20

www.tamilarangam.net

# வடுகக் கொள்ளையனுக்கு அஞ்சல்தலை! வந்தேறித் திராவிடங்களின் சூழ்ச்சி!!



கட்டபொம்மன் தபால் தலை வெளியிடக் கோரி, புது தில்லியில் மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஜக்மோகனிடம் (நடுவில் நிற்பவர்) சனிக்கிழமை மனு அளித்த சிவகாசி மக்களவைத் தொகுதி உறுப்பினர் வைகோ மற்றும் ராஜகம்பள மகாஜன சங்கத்தினர்.

எளியோரின் சொத்துக்களைச் சூறையாடி, தமிழ் மக்களைக் கொடுமையாய்த் துன்புறுத்தி வாழ்ந்த ஒரு கொடுங்கோலன் அவன்! பச்சையான ஒழுக்கக்கேடன்! இருப்பினும் அவன் ஒரு வடுகன் என்ற ஒரே கரணியத்தை முன்னிட்டு அவனது பிறங்கடைகளான இன்றைய வடுகக் கும்பல் அக் கொள்ளையனை வீரனாக்கி, தமிழனாகச் சித்தரித்து நிலையான ஒரு கறையைத் தமிழ் மண்ணில் ஏற்படுத்த எத்தனிக்கின்றன.

கட்டபொம்மனுக்கு அஞ்சல்தலை வெளியிட வேண்டுமாம்! வடுக வகையறாக்கள் தில்லிக்குக் காவடி தூக்கியிருக்கிறார்கள். கட்டபொம்மன் விடுதலைப் போராட்ட வீரனாம்! "வீரத்தின் வித்து கட்டபொம்மு!" என்று தெலுங்கர் கீதம் இதழ் பண் இசைக்கிறது. இப்படி தெலுங்கு வடுகர் உருவாக்கிய பொய்ப் புனைவுகளே தமிழனின் தலையில் திணிக்கப்பட்டுள்ளது. அதையேதான் உண்மை வரலாறு என்றும் தமிழன் நம்புகிறான். நடிகர் சிவாசி கணேசன் பல ஆண்டுகளுக்கு முன்பு நடித்த வீரபாண்டிய கட்ட பொம்மன் எனும் திரைப்படம்தான் தமிழர்களின் கண்முன்பு நிற்கிறது.

## ஒண்டவந்த வடுகர்களுக்கு இருக்கும் தெளிவு!

வீரபாண்டிய கட்டபொம்மன் என்று அழைக்கப்படும் கட்டபொம்மு எனும் வடுகத் தெலுங்கன் தூக்கிலிடப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 1799 ஆம் ஆண்டு அக்தோபர் திங்கள் 16 ஆம் நாள் அவன் தூக்கிலிடப்பட்டான். அவன் தமிழனுமல்ல. நல்ல தலைவனுமல்ல. ஏழை

கடந்த திசம்பர் 28 அன்று நெல்லை மாவட்டம் நெற்கட்டுச் சேவல் எனுமிடத்தில் உரையாற்றிய கருணாநிதி வழக்கம்போல வரலாற்றை வளைத்து, நெளித்து புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டியுள்ளார். "புலித்தேவனுக்குப் பிறகு வெள்ளையரை எதிர்த்து தீரமுடன் போராடியவர் வீரபாண்டிய கட்டபொம்மன். அவருடைய தளபதிகளான வெள்ளையத் தேவனும், தொல்தமிழர் (ஆதி திராவிட) வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கமும் அவருக்குப் பக்கபலமாக இருந்தனர். பல்வேறு குமுகங்களைச் சேர்ந்த இவர்களெல்லாம் அன்று ஒன்றுபட்டு வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டுள்ளனர். அந்தக் காலத்தை எண்ணிப்பாருங்கள். தமிழர்களாகிய நம்மால் இன்று ஏன் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை? என்ன சதி நடந்தது? இந்தச் சதியை நாம் அனைவரும் சேர்ந்து முறியடிக்க வேண்டாமா? தமிழர்கள் ஆட்சி நடத்தும் இக் கால கட்டத்தில் தமிழ்ச் சாதியினர் அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்." (தினமணி 29–12–1998)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கட்டபொம்மு தமிழன் அல்ல! தெலுங்கன்!**

இன்று தமிழர் நாட்டில் நடப்பதும் தமிழர் ஆட்சி அல்ல! கலப்படமற்ற தெலுங்கர் ஆட்சிதான்! கருணாநிதி சொன்ன முதல் பொய்யில் வைத்த பொடி என்னவென்றால், தெலுங்கனுக்கு, வெள்ளையத் தேவனும் (தேவரும்) வீரன் சுந்தரலிங்கமும் (மள்ளர்) உதவினர் என்பதுதான். இரண்டாவது பொய்யில் அவர் வைக்கும் வெடி என்னவென்றால் தமிழ்ச் சாதியெல்லாம் சேர்ந்து என் தலையில் மண்ணையள்ளிப் போட்டு விடாதீர்கள்! தொடர்ந்து தெலுங்கன்தான் தமிழனை ஆள வேண்டும் என்று தமிழனின் தலையில் எழுதியுள்ளதாக நம்புங்கள்! எனவே எனக்கு தமிழ்ச் சாதியெல்லாம் தொடர்ந்து குற்றேவல் புரியுங்கள் என்கிறார்.

இதற்கிடையில் "மனவாடு" தி.மு.க.வின் மாநிலப் பொதுச் செயலாளர் வைகோ தன் தெலுங்கு உறவுக்காரர்களோடு தில்லிக்குக் காவடி எடுத்து நடுவணரசின் அமைச்சர் சக்மோகனைச் சந்தித்து கட்டபொம்முவுக்கும் மற்றுமொரு தெலுங்கரான ஓமந்தூர் இராமசாமி இரெட்டியாருக்கும் அஞ்சல்தலை வெளியிட வேண்டி தில்லியில் தவம் கிடந்து போராடி, வரும் மார்ச் திங்களில் "அத் தலை" வெளிவரப்போகிறதாக உறுதிமொழி பெற்றுத் திரும்பியிருக்கிறார்.

வாக்குப் பொறுக்கும்போது மட்டும் தமிழனின் காலை நக்கும் இத் தெலுங்கு வந்தேறி, ஆட்சியில் குந்தியபின், அவரது இன நலன்களில் மட்டுமே கண்ணும் கருத்துமாய் இருப்பதை இதுவரை அறிய மறுக்கிற தமிழரெல்லாம் இனி புரிதல் வேண்டும். ஈழத் தமிழர் போராட்டம், ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டம் என்று தமிழர் நலன் காக்க வேண்டிய அத்தனைப் போராட்டங்களிலும் வெத்து வேட்டுக்களை வெடிக்கும் இப் புரட்டுப் புயல், தெலுங்கர் நலன் என்று வரும்போது மட்டும் கழுக்கமென்ன, சிரத்தையென்ன! தமிழர்கள் வடுகச் சூழ்ச்சிகளை தெளிவாகப் புரிதல் வேண்டும்.

**"வரி வட்டி கிஸ்தி!" – வெற்றுச் சொற்களே!**

ஆங்கிலேயருக்கு கட்டபொம்மு வரி கட்ட மறுத்தானாம்! சரம் சரமாக நம் காதில் வடுகர்கள் பூ சுற்றுகிறார்கள். 1791 ஆம் ஆண்டில் வடுகனான கட்டபொம்மு பாஞ்சாலங்குறிச்சியில் பாளையக்காரனாக பொறுப்பேற்கிறான். 1798 வரை ஆங்கிலேயருக்கு அவன் ஒழுங்கு மரியாதையாகக் கப்பம் கட்டி வந்துள்ளான் என்பதற்கு எல்லா சான்றுகளும் உண்டு. மக்களிடமிருந்து இவன் வரி தண்டவில்லை! மாறாக மக்களின் சொத்துக்களையும் வளங்களையும் கொள்ளையடிப்பதே அவன் தொழில். பக்கத்துப் பாளையங்களிலிருந்தும் கொள்ளையடித் திருக்கிறான். 31–05–1798 வரை அவன் ஆங்கிலேயருக்கு வைத்திருந்த நிலுவைத் தொகை 15,550 உருபா 19–9–1798 இல் சாக்சன் எனும் ஆங்கிலேய அதிகாரியின் உசாவல் நிகழ்கிற நேரத்தில் 10,460 உருபாக்களைக் கட்டிவிட்டு வெறும்



5090 உருபா மட்டுமே நிலுவையாய் நின்றிருக்கிறது!

**இவன்தானா ஆங்கிலேயனுக்கு வரி கொடுக்க மறுத்த மாவீரன்?!**

சாக்சன் கட்டபொம்முவை நிற்க வைத்தே உசாவினான். 19–9–1798 அன்று உசாவல் நிறைவு அடையாததால் மறுநாள்வரை தங்கியிருக்க பணிக்கிறான். ஆனால் வாய்த் தகராறு முற்றி கட்டபொம்மு தப்பிக்கிறான். அப்போது கிளார்க் எனும் ஆங்கிலேய அதிகாரி ஒருவனைக் கொன்று விட்டு கட்டபொம்மு தப்பிகிறான். அவனும் அவனது கூலிப்படையும் தப்பித்து ஓடும் வழியிலேயே இராமநாதபுரம் கடைத் தெருவைக் கொள்ளையடித்தே ஓடியிருக்கின்றனர். என்னே நாட்டுப் பற்று!!

ஆங்கிலேயருடைய அடிவருடியாக பல ஆண்டுகள் காலந்தள்ளிய கட்டபொம்மு இறுதியில் சூழ்நிலைகள் ஒத்துவராதபோது டச்சுக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்தான்! ஆனால் மண்ணின் மக்களான தமிழர்களின் வாழ்வையும் வளங்களையும் சுரண்டுவதை மட்டும் நிறுத்தினானில்லை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் இவனைப் பற்றிக் குறிப்பிடும்போது இவன் அடித்த கொள்ளைகளை வரிசைப்படுத்துகிறது. ஏழை மக்களின் சொத்துக்களைச் சூறையாடுவது, அம் மக்களின் ஆடு மாடுகளை ஆயிரக் கணக்கில் ஓட்டிச் செல்வது, (எ.கா. சோளபுரத்து வடுகர்கள் எட்டயபுரத்து ஊர்களிலுள்ள ஆடு மாடுகளையெல்லாம் ஆயிரக் கணக்கில் ஓட்டிச் சென்றுவிட்டனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன) ஊர்களைக் கொள்ளையிடுவது இவைகளே இவனது அன்றாடத் தொழிலாக இருந்திருக்கிறது.

"விருதாப் பொல்லாங்கு செய்யுறார் எங்கள்
வீட்டில் வந்து கொள்ளை யடிக்கிறார்.
எப்போதும் வென்றான் காட்டுநா
யன்கன்பட்டி
எல்லைச் சதிரிலே மேய்ந்த மாட்டை
முப்பது நாற்பது பால்மாட்டை ஓட்டி
முன்னூ றெருதையுங் கொள்ளை கொண்டார்"

என்று அன்றைய நாட்டுப்புறப் பாடல்களில் இக் கொள்ளையனின் கைவரிசை குறித்து மக்கள் மனம் வெதும்பிப் பாடியுள்ளனர்.

அருப்புக் கோட்டை, கோபாலபுரம் எனும் ஊர்களை மொத்தமாகக் கொள்ளையடித்திருக்கிறான். நெல் முற்றி வயல்களில் விளைந்திருக்கும் நேரத்தில் அதை அறுத்துக் கொண்டுபோய் விடுவானாம். (எ.கா. அச்சங்குளம் மற்றும் வண்டானம் ஊர்களையொட்டியிருந்த வயல்களிலிருந்து முழுவதுமாக நெல்லைக் கொள்ளையடித்திருக்கிறான்) கட்டபொம்மன் ஒளிவழிபாடு நடத்தும்போது அடிக்கப்படும் மணியோசை பாஞ்சாலங்குறிச்சியில் கேட்க வேண்டுமென்று வழிநெடுக மணிமாடங்களை ஏற்படுத்தினானாம். அதற்காக அந்தப் பக்கங்களிலிருந்த வைரம் பாய்ந்த பனை மரங்களையெல்லாம் வெட்டிச் சாய்த்திருக்கிறான் இக் கொடூரன். இதன் காரணமாகவே அந்தப் பகுதியிலிருந்த (பனையேறும் தொழிலை வாழ்வடிப்படையாகக் கொண்ட) நாடார்கள் இவனை மிகக் கொடிய ஒரு எதிரியாகவே பாவித்திருக்கிறார்கள்.

கட்டபொம்முவின் கொடுமைகள் தாளாமல் மக்கள் வெள்ளைக்காரனிடம் முறையிட வேண்டியிருந்தது. இவனைவிட வெள்ளைக்காரன் எவ்வளவோ மேல் என்ற எண்ணத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

"பட்டியிலுள்ள சமுசாரிகளெல்லாம்
போனார் சென்னல் துரையிடத்தில்
காட்டிலுங் கொள்ளை வீட்டிலுங் கொள்ளை
கட்ட பொம்மு கொள்ளை யாகுதைய்யா
காட்டிலுள்ள கதிர்களெல்லாம்
கட்டபொம்மு கொள்ளையாகுதைய்யா
ஆறும் குளத்தூருப் பண்ணையிலே பாவி
அஞ்சாறு பிஞ்சைக் கதிரெடுத் தான்
கன்னல் கட்டையூர் மால் தனியே
கற்ற நல்லூர் சோள புரம்
யெல்லைச் சதுரிலே மேய்ந்த மாட்டை
யேழுநூறு மாட்டையுங் கொள்ளை செய்தான்
.....
கட்டபொம்மு கொள்ளை கொடுப்போமா
நாங்கள்
கும்பினி காணிக்கை கட்டுவோமா...

என்று அடித்தட்டு மக்கள் நெஞ்சு வெடித்துப் பாடுகின்றனர்.

அன்றைய நூற்றுக் கணக்கான நாட்டுப்புறப் பாடல்களில் இக் கொடியோனின் நடவடிக்கைகளை விலாவாரியாக மக்கள் எடுத்துரைக்கிறார்கள். மணிக் கூடங்களில் வெண்கல மணிகளைக் கட்டுவதற்காக மக்கள் கஞ்சி குடிக்கும் கும்பா மற்றும் பிற ஏனங்களையெல்லாம் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறான் அக் கயவன்! இவற்றிற்கெல்லாம் வரலாற்றுச் சான்றுகள் உண்டு!

இவன் செத்த பிறகுகூட அவனைத் தூக்கிலிட்ட அந்த இடத்தில் அவ் வழியாகச் செல்லும் மக்கள் கூழாங் கற்களை எடுத்து அவ்விடத்தில் எறிந்து செல்வது வழக்கமாம்! அல்லது பழைய செருப்புகளை அங்கிருந்த மரங்களில் கட்டித் தொங்க விடுவராம். காரணம் என்னவென்றால் கட்டபொம்முவின் ஆவி தங்களையும் தங்களது ஊர்களையும் அண்டிவிடக் கூடாது என்னும் வேண்டுதலுக்காக அப்படிச் செய்வார்களாம்.

இப்படிப் பட்ட ஒரு கொடியவனின் வரலாற்றை எப்படி மாற்றி தமிழர்களின் தலையில் அவனை ஒரு நல்லவனாகத் திரித்துத் திணித்திருக்கிறார்கள்? என்ற வினா இயற்கையாகவே எழுகிறது! "வீரபாண்டிய கட்டபொம்மன்" எனும் திரைப்படத்தின் பங்கு இதற்கு உண்டு! அந்த படத்தை இயக்கியது யாரென்று பார்த்தால் அதுவும் பி.ஆர். பந்தலு என்கிற தெலுங்கர்தான்!

மக்கள் வெறுத்து ஒதுக்கிய அக் கொடியவனின் அரண்மனை இடிந்து தகர்ந்து மக்கள் அண்ட விரும்பாத ஒரு முட்புதராகக் கிடந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை பளபளக்க வைத்தது இதே கருணாநிதிதான்!

திண்டுக்கல் மாவட்டத்திற்கு திருமலை நாயக்கனின் பெயர் சூட்டியதும் இக் கருணாநிதிதான்!

இந்த கட்டபொம்முவின் பெயரால் அன்று ஒரு மாவட்டம்! ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு அவன் பெயர்! நல்ல வேளை அவையெல்லாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒழிந்தன. ஆனால் வடுகக் குசும்பு அடங்கி விடுமா என்ன? வை.கோ. தில்லிக்குக் காவடி தூக்கி அவனுக்கு அஞ்சல் தலை வெளியிடு எனப் போராடுகிறார். கட்டபொம்முவைத் தமிழனாகச் சித்தரித்து அந்த ஓட்டைக் குடைக்குள் தன்னை மறைத்துக் கொள்ளலாம் என்றும் தன் தெலுங்குச் சாயத்தை அந்த ஓட்டைக் குடை மறைக்கும் என்றும் நம்பி நப்பாசையோடு மேடையில் நாடகம் போடுகிறார் கருணாநிதி!

அடிமைத் தளையறு

நாடகத்தின் கதை ஒன்றுதான்! பாத்திரங்கள்தான் மாறியிருக்கின்றன. வடுகனான கட்டபொம்மு, மன்னன் என்று பெயர் சூட்டிக் கொண்டிருந்த பச்சையான கடைந்தெடுத்த ஒரு கொள்ளைக் காரன்! இருந்தும் விடுதலைப் போராட்ட வீரன், வீரத்தின் வித்து என்றெல்லாம் பெயரைப் பெறுகிறான். அவ்வந்தேறி வழி மரபில் தோன்றிய வடுகக் கும்பல்தான் தமிழகத்தின் ஆட்சி அரியணையைச் சுற்றி இன்றும் குந்திக் கொண்டிருக்கிறது. தமிழினத் தலைவன், தமிழர் தலைவர், புரட்சிப்புயல், என்று பட்டங்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கன்னடப் பெரியாருக்கு மூலை முடுக்கெல்லாம் சிலை உண்டு! கன்னட வலிப்பு நடிகனுக்குத் தெருவெல்லாம் சுவைஞர் (இரசிகர்) மன்றம் உண்டு. சென்னப்பநாயக்கன் எனும் தெலுங்கன் பெயரில் தமிழகத்தின் தலைநகரமே உண்டு! அத் தலைநகரின் கோட்டைக்கு தெலுங்கரான குமாரசாமி ராசா பெயரையும், அரசுத் தோட்டத்திற்கு மற்றுமொரு தெலுங்கரான ஓமந்தூரார் பெயரையும் இட்டு கருணாநிதி மகிழ்கிறார். இனி கட்டபொம்முவுக்கு அஞ்சல்தலையாம்! வடுக முத்திரைகளை தமிழ் மண்ணில் பதிப்பிக்க வேண்டும் என்பதற்காக இந்த வந்தேறிகள் எடுக்கும் முயற்சிகளை தமிழன் அடையாளம் காண வேண்டும். அந்நொடியே வடுக இருள் தமிழ் மண்ணை விட்டு அகலும்! தமிழரின் உரிமைத் தாயகம் முகிழும்!!


# தமிழ் நாட்காட்டி(தி.ஆ.2030)

**தமிழர் மாத நாட்காட்டி, திருவள்ளுவர் ஆண்டு 2030 க்கு அணியமாக்கப்பட்டு விற்பனைக்கு உள்ளன.**
**ஒரு நாட்காட்டியின் விலை 20 உருபா மட்டுமே**

தேவையானோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
செ. தங்கத் தமிழன்,
தமிழ்நாடு திருவள்ளுவர் மன்றம்,
62-ஏ அண்ணா நகர், திருத்துறைப்பூண்டி 614713


அச்சிட்ட புத்தகம்
**Printed Book**